Chundikuli Branch Library

விலை ரூபா 1–25

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 27 | ஆனி 25 | ஷவ்வா 20 | இதழ் 149
யாழ்ப்பாணம் | செவ்வாய்க்கிழமை | 9-7-1985

## பூட்டான் பேச்சுவார்த்தையை எதிர்த்து
# யாழ்.மாவட்டத்தில் ஹர்த்தால்
## கடையடைப்பு; கல்லூரிகள் பகிஷ்கரிப்பு!

(யாழ்ப்பாணம்)

பூட்டானில் நடைபெறும் பேச்சுவார்த்தையை எதிர்த்து நேற்று யாழ்ப்பாண மாவட்டத்தில் பூரண ஹர்த்தால் நடைபெற்றது.

நேற்று யாழ். நகரம் முற்ருக ஸ்தம்பித்தது. வாகனப் போக்குவரத்து நடைபெற வில்லை. கல்லூரிகள், தனியார் கல்வி நிறுவனங்கள், எதற்கும் மாணவர்கள் செல்ல வில்லை.

யாழ்ப்பாண நீதிமன்றங்களுக்கு சட்டத்தரணிகளும், கட்சிக்காரர்களும் வராததினுல் விசாரணைகள் நடைபெறவில்லை. வீதிகளில் ஒருசில சைக்கிள்களில் நடமாடுபவர்களை மட்டுமே காணக்கூடியதாக இருந்தது.

தியேட்டர்கள், மினிசினிமாக்களில் காட்சிகளும் நடைபெறவில்லை.

யாழ் அரசினர் ஆஸ்பத்திரி வெளிநோயாளர் பகுதியில் ஒரு சில நோயாளர்கள் மட்டுமே வந்திருந்தனர்.

வர்த்தக நிலையங்கள், கடைகள், தொழிற்சாலைகள் எதுவும் திறக்கப்படவில்லை.

வீதிகளில் சனநடமாட்டத்தை காண முடியவில்லை. தேநீர் கடைகள் முற்ருக மூடப்பட்டிருந்தன.

வ. போ ச. பஸ் சேவைகள் எதுவும் நடைபெறவில்லை பிற்பகல் வீதிகள் யாவும் வெறிச்சோடிக் காணப்பட்டன. (க)

### வவனியாவில்

வவனியாவில் நேற்றுக்காலை 8 மணிவரை கடைகள் பூட்டப்பட்டிருந்ததாகவும் 10 மணியளவில் பொலிஸார் வந்து கடைகளைத் திறக்குமாறு கேட்டதாகவும். அதனைத் தொடர்ந்து சிலகடைகள் மாத்திரம் திறக்கப்பட்டி

(8-ம் பக்கம் பார்க்க)

# பூட்டான் பேச்சுக்கள் அமைதியாக ஆரம்பம்!

## இன்று விரிவான விவாதம்

(புதுடில்லி)

இலங்கை இனப்பிரச்சனைக்கு பேச்சுவார்த்தை மூலம் தீர்வு காண்பதற்கு உதவும் நோக்குடன் இந்திய அரசு பெருமுயற்சியுடன் ஏற்பாடு செய்துள்ள பேச்சுவார்த்தைகள் நேற்று பூட்டான் தலைநகரான திம்புவில் அமைதியான சூழ்நிலையில் ஆரம்பமாகின.

இரகசியமாகவே நடைபெறும் இந்த பூர்வாங்க பேச்சுவார்த்தைகள் சுமுகமான சூழ்நிலையில் ஆரம்பமானதாக பூட்டான் அரசு வெளியிட்ட அறிக்கை கூறியது.

பூட்டான் வெளியுறவு அமைச்சர் இப்பேச்சுக்களுக்குத் தலைமைவகித்து நடத்துகிருர் இன்று மீண்டும் பேச்சுவார்த்தைகள் விரிவானமுறையில் நடைபெறும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

இலங்கை அரசின் தரப்பிலும் தீவிரவாத தமிழ்ஈழ விடுதலை இயக்கங்களின்சார்பிலும் உயர்தலைவர்கள் எவரும் இப்பேச்சுக்களில் கலந்துகொள்ளவில்லை அடுத்த கட்டப்பேச்சுக்களில் இருதரப்பிலும் முக்கிய

(8-ம் பக்கம் பார்க்க)

## சாவகச்சேரியில் ஆர்ப்பாட்டம்

(சாவகச்சேரி)

தமிழ்ப் போராளிகளுக்கும் இலங்கை அரசுக்குமிடையில் பூட்டானில் நேற்று ஆரம்பமான பேச்சுவார்த்தையை கண்டித்துசாவகச்சேரிப்பொது மக்கள் ஆர்பாட்ட ஊர்வலமொன்றை நேற்று நடத்திஞர்கள்.

சாவகச்சேரியில் இருந்து ஆரம்பிக்கப்பட்ட இவ்வூர்வலத்தில்மாணவர்கள், சிறுவர்கள், இளைஞர்கள், யுவதிகள் உட்படப் பல்லாயிரக் கணக்கான சாவகச்சேரித் தொகுதியிலுள்ளகிராமங்களைச் சேர்ந்த பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

சாவகச்சேரியில் காலை 9 மணிக்கு ஆரம்பமான இவ்வூர்வலம் மீசாலையூடாக சென்று நண்பகல் 12 00 மணியளவில் கொடிகாமத்தில் பொதுக்கூட்டம் ஒன்றுடன் முடிவுற்றது. இந்த கூட்டத்தில் 'யுத்த நிறுத்தம்' பற்றி பல பொது

(7ம் பக்கம் பார்க்க)

## தேர்தல் வழக்கு மேன்முறையீடும் தள்ளுபடி

[கொழும்பு]

மகர தேர்தல் தொகுதி பாராளுமன்ற உறுப்பினராக திரு கமலவர்ண ஜெயக்கொடி தெரிவுசெய்யப்பட்டதை ஆட்

(8ம் பக்கம் பார்க்க)

## தாதிமார்களுக்கு விரைவில் சம்பள உயர்வு

[கொழும்பு]

தாதிமார்களுக்கு விரைவில் சம்பள உயர்வும் விசேட பதவி உயர்வும் வழங்கப்படவுள்ளது. இதற்கான ஏற்பாடுகளை சுகாதார அமைச்சர் திரு. ரஞ்சித் அத்தபத்து மேற்கொண்டுவருகிருர்.

சுகாதார அமைச்சின் ஆலோசனையின் பேரில் 'சம்பள மீளாய்வு' கமிட்டியின் ஆலோசனைகளுக்கு ஏற்ப இந்த சம்பள உயர்வும், பதவி உயர்வும் வழங்கப்படவுள்ளது.

வழங்கப்படும் இந்த சம்பள உயர்வு தற்போது சட்டப்படி வேலை செய்யும் தாதிமார்களுக்கு போதியநிவாரணமாக அமையும் என்றும் சுகாதார அமைச்சர் தெரிவித்துள்ளார்.

இந்த சம்பள உயர்வுஅடுத்த வாரமளவில் அறிவிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## நேற்றும் யாழ். மாவட்டத்தில் ஆர்ப்பாட்ட ஊர்வலங்கள்!

(அலுவலக நிருபர்கள்)

இனப்பிரச்னை சம்பந்தமாக பூட்டானில் நடைபெறும் பேச்சுவார்த்தைக்கு ஆட்சேபம் தெரிவித்து நேற்றும்யாழ். மாவட்டத்தில் பரவலாக ஆர்ப்பாட்ட ஊர்வலங்கள் நடைபெற்றன.

பல ஆயிரக்கணக்கான மக்கள் சுலோக அட்டைகளைத் தாங்கிக் கொண்டும் கோஷங்களை எழுப்பிக்கொண்டும் ஊர்வலமாகச் சென்ருர்கள்.

ஆண்கள், பெண்கள், வயோதிபர்கள், இளைஞர்கள், யுவதிகள், பாடசாலை மாணவ மாணவிகள் இவ்வூர்வலங்களில் கலந்துகொண்டனர்.

வன் செயல்களினுல் உறவினர்களையும் உடமைகளையும் இழந்தவர்கள் ஊர்வலத்தில் பெருந்திரளாகக்காணப்பட்டனர்

துப்பாக்கிச்சூட்டினுல் ஊனமுற்றவர்களும் மற்றும் தாக்குதல் சம்பவங்களில் பாதிக்கப்பட்டவர்களும் இவ் ஊர்வலங்களில் காணப்பட்டனர்

1976 ல் தமிழீழப் பிரகடனம் செய்யப்பட்ட இடமான வட்டுக்கோட்டையிலிருந்து நேற்றுக்காலை புறப்பட்ட நீண்ட ஊர்வலம் மானிப்பாய் வீதி வழியா யாழ் நகர்வந்து சேர்ந்தது இவ்வூர்வலம் வந்து

(8ம் பக்கம் பார்க்க)

## வெகுநாட்களுக்குப்பின் வெடிச்சத்தம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் கோட்டை பகுதியில் நேற்றுக் காலை வெடிச்சத்தம் கேட்டதைத் தொடர்ந்து சிறிது பதற்றம் ஏற்பட்டது

பண்ணை வீதிக்கு சென்றுகொண்டிருந்த சிலர் திரும்பி பெரியகடைப்பக்கம் ஓடி வந்தார்கள்.

ஆகாயத்தை நோக்கியே சுடப்பட்டதாகவும் அவர்கள் தெரிவித்தனர்.

### 'ஒத்துழைக்காவிடில்
## ஆனையிறவுக்கு அனுப்பப்போவதாக பொலிஸ் அதிகாரி மிரட்டினுர்'
### நீதிமன்றத்தில் பிதா சிங்கராயர்

[கொழும்பு]

இன்ஸ்பெக்டர் காலலகே என்னை பார்த்துவிட்டு வெளியேறியதும் இன்னொரு உத்தியோகத்தர் வந்து என்னை ஏசினுர். நீங்கள் பொலிசுடன் ஒத்துழைக்கவில்லை. உண்மை பேசவில்லை இப்படியே செய்தால். ஆனையிறவுக்கு அனுப்பப்படுவீர்கள் என்று அந்த அதிகாரி என்னிடம் கூறினுர்

இவ்வாறு அவசரகாலச் சட்டத்தின்கீழ் கொழும்பு மேல் நீதிமன்றத்தில் நடைபெற்று வரும் வழக்கில் வண பிதா சிங்கராயர் தொடர்ந்து சாட்சியமளிக்கையில் இவ்வாறு கூறினுர். சிரேஷ்ட சட்டத்தரணி திரு பாலாதம்பு சாட்சியத்தை நெறிப்படுத்தினுர்.

பிதா சிங்கராயர் மேலும் கூறியதாவது;

' அவர் அப்படி கூறியபோது திரு புண்யா டி சில்வா குறுக்கிட்டு இன்று நன்ருக இருக்கிருர். அந்தப் பொறுப்பை நான் ஏற்றுக்கொள்கிறேன் என்று கூறினுர். இதையடுத்து

[8-ம் பக்கம் பார்க்க]

# எண்ணெய் ரயிலுக்கு குண்டுவைக்க முயற்சி!
# 'புலிகள்' தலையிட்டதால் விஷமிகள் தப்பி ஓட்டம்!!

(யாழ்ப்பாணம்)

சமூகவிரோதிகளால் குண்டு வைத்துத் தகர்க்கப்படவிருந்த எண்ணை ரயில் தங்களின் தலையீட்டால் அப்பெரிய ஆபத்திலிருந்து காப்பாற்றப் பட்டதாகத் 'தமிழீழ விடுதலைப் புலிகள்' வானொலியில் நேற்று அறிவித்தனர்.

மக்களுக்கு அத்தியாவசிய சேவைகள் புரியப்படும் இடங்களை சமூகவிரோத சக்திகளிடமிருந்து காப்பாற்ற தாம் காவல் புரிந்து வருவதாகவும் அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டது.

காங்கேசன்துறையில் நேற்று முன்தினம் 7-ம் திகதி இரவு எம்மக்கள் சேவையின் நிமித்தம் எண்ணை ரயிலை பாதுகாத்து நின்றபோது 4 அல்லது 5 பேர் அந்த ரயில் வண்டியை, குண்டுவைத்து தகர்க்க முயன்ருர்கள் என்றும் வயர்களைப்பொருத்தி குண்டை வெடிக்கவைக்க ஆயத்தம் செய்த போது தக்கநேரத்தில் தாங்கள் சென்றதால் அந்த நபர்கள் அனைத்தையும் கைவிட்டு ஓடி விட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

அந்த நபர்கள் கொண்டு வந்த குண்டு வெடித்திருப்பின் ஒயில் ரயில் முற்ருக தகர்ந்திருக்குமென்றும் அதனுல் அவ்வூர் முற்ருக தீயினுல் எரிக்கப்பட்டிருக்குமென்றும் அவ்வானொலி தெரிவித்தது.

எமது மக்களை அழிக்கும் இம் முயற்சி இயக்கங்களின் முயற்சியல்ல இது ஒரு திட்டமிட்ட செயல் எனவே மக்கள் மிகவும் எச்சரிக்கையாக இருந்து சம்பந்தப்பட்டவர்களை இனம்கண்டு அருகில் இருக்கும் விடுதலை இயக்கத்துக்கு அறிவிக்க வேண்டும்" என்றும் வேண்டுகோள் விடுக்கப்பட்டது. (மா)

# சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

கால் நடைகளுக்கு உகந்த பெக்கூட்ரின் பவுடர் (Pecutrin pd.) மொத்த விலை- 7-50. சில்லறை விலை - 8·50. தொடர்பு கொள்க: M G M. Forage Stores, 781, K. K. S. Rd and 208, 1st Cross Street, Jaffna. 4289

இசுசி பஸ் (Isuzi) 33 ஆசனங்களுடையது. உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: S. நவரெட்ணம், துரைவாசம், இராசபாதை, திருநெல்வேலி, யாழ்ப்பாணம். 4294

Stop பிறேக் ஒயில் விற்பனைக்குண்டு. வர்த்தகர்கள் விசேடசலுகைக்குத் தொடர்பு கொள்ளவும்: ட்றேட் சென்ரர், Home Finance Ltd., 155, மானிப்பாய்வீதி. யாழ்ப்பாணம். 2862

சோடா போத்தல் மூடி அடைக்கும் மெசின் விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு: நாமகள் ஸ்ரோர்ஸ், 341, பருத்தித்துறை வீதி. நல்லூர் அரசடி சந்தி. 4308

பெரியகுளத்தில் 1 போக நீர்ப்பாய்ச்சல் வயல் 50 ஏக்கர் குத்தகைக்கு அல்லது விற்பனைக்குள்ளது. கடிதமூலம் தொடர்புகொள்ளவும்: பி. சங்கரப்பிள்ளை, பெரியகுளம், மாங்குளம். 4276

பரந்தன், முரசுமோட்டை தபால் நிலையம், வைத்திய நிலையம், காணி அதிகாரி கந்தோரி, பாடசாலை ஆகியவைக்கு அண்மையில் ஒரு ஏக்கர் வீட்டுடன் குடியிருப்புக் காணியும், மூன்றுஏக்கர் திறம் வயலும் விற்பனைக்குண்டு தொடர்பு கொள்ளவும்: சி. கணேசன், தபால்நிலையத்துக்கு அண்மையில், 108/1, முரசுமோட்டை. 4303

## தேவை

றேடியோ திருத்துபவர் தேவை. நேரில் காலை 8 மணி முதல் 5 மணிக்குள் வரலாம். ரெலிகோணர், மொடர்ன் மாக்கற், சாவகச்சேரி. 4159

## வகுப்புகள்

108, Brown Road, Jaffna A/L 87 இரசாயனம் ஆசிரியர் சத்தீஸ், புதிய வகுப்புக்கள். ஆரம்பம்: 10-07-85 புதன். காலை வகுப்பு புதன், வெள்ளி 7-15 a. m. மாலை வகுப்பு: திங், புதன், 4-00 p m. சனி, ஞாயிறு 3-00 p. m. ஆரம்பம்: 13-07-85 3-00 p. m. [4245]

## தவறிவிட்டது

எனது அடையாள அட்டையும், பிறப்புப் பத்திரமும், எனது நண்பனின் பிறப்புப் பத்திரமும் கடந்த ஞாயிற்றுக் கிழமை [7-7-85] அன்று தட்டாதெருவுக்கும், மானிப்பாய் வீதிக்கும் இடையில் தவறிவிட்டது. தயவுசெய்து கண்டெடுத்தவர் உடனடியாக எனது விலாசத்தில் சமர்ப்பிக்கவும். எம். பொதிக், 43, காமால் வீதி, யாழ்ப்பாணம். 4309

**A/L 87**
சனி, ஞாயிறு, வகுப்பு
7-15: பிரயோககணிதம்
8-30: தூயகணிதம்
ஆரம்பம்: யூலை 14
**Ravimohan**
JAFFNA
[வெலிங்டன் சந்திக்கும் பெருமாள் கோவிலுக்கும் இடையில்]
4263


## பின்னுறுதிக் கட்டளைபற்றிய அறிவித்தல்

யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றில்

மரணசாதனமின்றி இறந்த வட்டுக்கோட்டை கிழக்கைச் சேர்ந்த ஆறுமுகம் கதிரவேற்பிள்ளை என்பவரின் மரணச் சொத்துக்கள் விடயமாக.

இறந்தவர்,
கதிரவேற்பிள்ளை சேகரன்,
வட்டுக்கோட்டை கிழக்கு,
வட்டுக்கோட்டை.
மனுதார்,

வழ. இல.
தத்துவம்/3840.
எதிர்
1. கதிரவேற்பிள்ளை பாஸ்கரன்,
2. கதிரவேற்பிள்ளை மகள் சுரேசா,
3. கதிரவேற்பிள்ளை மகள் சுமதி எல்லோரும் வட்டுக்கோட்டை கிழக்கு வட்டுக் கோட்டை (3ம் எதிர் மனுதார் பராயமற்றவர் இவரின் பாதுகாவலர் 1ம் எதிர் மனுதார் மூலம்.)
எதிர்- மனுதார்கள்'

மேலேயுள்ள இலக்கங் கொண்ட மரணசாதன வழக்கு மேலே பெயர் குறிப்பிட்ட இறந்தவரின் மரணச் சொத்தை நிருபிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்க பின்னுறுதிக் கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகிறது.

அக்கறையுள்ள ஆள் எவரேனும் 1985 ம் ஆண்டு ஆவணி மாதம் 9ம் திகதி முற்பகல் 9 மணிக்கு இந் நீதிமன்றத்தின் முன்னிலையில் தோன்றி அவ்வாறு பதியப்பட்டுள்ள பின்னுறுதிக்கட்டளை ஏன் முற்றுன கட்டளையாக்கப் படலாகாது என்பதற்கு காரணம் காட்டுமாறு இத்தால் தேவைப் படுத்தப்படுகின்றனர்.

1985-ம் ஆண்டு ஆனி மாதம் 28 ந் திகதி.

நீதிமன்றக் கட்டளைப்படி
கு. குலசிங்கம்,
பதிவாளர்.

திருமதி
எம். பாக்கியநாதன்,
மனுதார், தரணி.
4275

# அத்தியாவசிய உணவு உற்பத்தியின் அவசியம்

(கொழும்புத்துறை)

''இன்றைய நாட்டு நிலைமையில் அத்தியாவசிய உணவுகளைத் தாங்களாகவே உற்பத்தி செய்ய வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுள்ளதினால் எமது கிராமத்தில் வீடுகள் தோறும் வீட்டுத் தோட்டங்களை மேலும் ஊக்குவித்து இலகுவாக்கும் முகமாக வதிரி அபிவிருத்தி நிறுவனம் விவசாயக் கருவிகளை இலவசமாக வழங்கியுதவி வருகின்றது.''

இவ்வாறு வதிரி அபிவிருத்தி நிறுவனத்தின் கடந்த ஆண்டிற்கான முன்னேற்ற அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. மக்களிடையே சேமிப்புப் பழக்கத்தைப் பரப்பும்முகமாகப் பரீட்சார்த்தமாக ஒரு சிறு சேமிப்புத் திட் திட்டம் உருவாக்க இலவசமாக உண்டியல்கள் வழங்கப்பட்டனவென்றும் சம்பந்தப்பட்டவர்களின் அசிரத்தை காரணமாக இச் சிறு சேமிப்புத்திட்டம் வெற்றியளிக்கவில்லையென்றும் கனடிய உயர் ஸ்தானிகராலயத்தின் நிதியுதவியுடன் பீப்பாத் தகரத்தினால் அடைக்கப்பட்ட 39 முழுஅளவு மலசல கூடங்கள் கட்டி முடிக்கப்பட்டுள்ளனவென்றும் இதற்கென கனடா அரசு 50,000 ரூபாவை நிதியாக வழங்கியிருந்ததென்றும் அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வதிரி அபிவிருத்தி நிறுவனம் நீர் விநியோகத் திட்டமொன்றை உருவாக்குவதற்கான சாத்தியக்கூற்று அறிக்கையைத் தயாரித்துள்ளது. நன்னீரில் மீன் வளர்க்கும் திட்டத்தின்கீழ் மீன் வளர்க்க விரும்புவோருக்கு வேண்டிய தொழில்நுட்ப ஆலோசனைகளை வழங்கவும் நிறுவனம் முன்வந்துள்ளது. நல்லின ஆடு வளர்ப்புத் திட்டத்தை வெற்றிகரமாகச் செயற்படுத்தும்முகமாக ஆட்டுக்கடா சேவை நிலையமொன்றையும் வதிரி அபிவிருத்தி நிறுவனம் நிறுவவுள்ளது.


**O/L Day Classes**
ஆரம்பம்:
10-07-85
காலை- 8-30
விபரங்கட்கு:
நிரு டியூசன் சென்றர்
புகையிரதநிலைய வீதி,
கோண்டாவில். (4310)


# அலெக்ஸாண்டர் புதிய தூதுவர்

[புதுடில்லி]

இந்தியப்பிரதமர் திரு. ராஜிவ் காந்தியின் முன்னாள் செயலர் திரு பி. சி. அலெக்ஸாண்டர் பிரிட்டனுக்கான புதிய இந்தியத் தூதுவராக நியமிக்கப்பட்டுள்ளார்.


# 31வது நாள் நினைவஞ்சலி

**அமரர் சுப்பையா தம்பிஐயா**

(முன்னாள் C. W. E. பண்டசாலை அதிபர்)



தோற்றம்:-
26-2-1918

மறைவு:-
9-6-1985

உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

அன்பு மனைவி, மக்கள், மருமகன், பேரப்பிள்ளைகள். உற்றார், உறவினர்கள், நண்பர்கள்.

'அன்ன விலா,'
உரும்பிராய் வடக்கு,
உரும்பிராய். (4194)

# 6வது ஆண்டு நினைவஞ்சலி

பொலிஸ் இன்ஸ்பெக்டர்
**S. P. குருசாமி**



தோற்றம்:
15-10-1922

மறைவு:
1-7-1979

திதி:
9-7-1985

கண்ணென எம்மைக் காத்தீர்
கவலையால் நாமோ இந்த
மண்ணிடை வருந்த விட்டே
வானகம் அடைந்தீர் அந்தோ
விண்ணினை அடைந்தே ஆறு
ஆண்டுகள் மேவிற்றென்றும்
எண்ணத்தில் தெய்வமாகி
இருக்கின்றீர் நீவிர், ஐய!

அன்பு மனைவி. ஆசைமகள், மருமகன், பேரப்பிள்ளைகள்:
ரமேஷ், பிரகாஷ், ஆகாஷ், பிரதீஷ், சபேஷ்.
204 மானிப்பாய் வீதி,
ஒட்டுமடம், யாழ்ப்பாணம். 4230

# 31-ம் நாள் நினைவஞ்சலி

அமரர் P. S சின்னத்துரை



தோற்றம்:
9- 1- 1905

மறைவு:
9 - 6 - 1985

எங்கள் அன்புத் தெய்வமே! நீங்கள் இப் பூவுலகில் வாழ்ந்த காலமெல்லாம் புகழுலகிலே துலங்கி மறைந்தீர் உமது நாமம் என்றும் மறையாது புகழ்பெற்று நிற்கின்றது. எம்முடன் நீர் வாழ்ந்த காலமெல்லாம் சீரும் சிறப்புடன் இருந்து எம்மை மகிழ்வித்தீர். எம்மை வழிநடத்திச் சென்ற குடும்பத்தலைவா! நம்மத்தியில் இருந்து காலன் உங்களைப் பிரித்தாலும் உங்கள் அன்பு நினைவுகள் எம்மைவிட்டுப் பிரியாது உமது பாசத்தால் எம் இதயத்தில் அகல் விளக்காக மலர்ந்தீர். உங்கள் பிரிவால் துயறும் எம்மை ஆண்டவன் தான் வழிநடத்திச் செல்ல வேண்டும். உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

உங்கள் பிரிவால் துயறும்:
அன்பு மனைவி, அருமை மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள். (4298)

# மரண அறிவித்தல்

திருமதி
**இ. அன்னலெட்சுமி அம்மா**

கொக்குவில் இரத்தினசபாபதிக்குருக்களின் அன்பு மனைவியும், கேதீ வரக்குருக்கள், இராசலட்சுமி, பத்மலோசனி, பாலச்சந்திரசர்மா ஆகியோரின் தாயாருமாகிய அன்னலெட்சுமிஅம்மா காலமாகிவிட்டார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று 9ம் திகதி செவ்வாய் காலை 9-00 மணிக்கு கொக்குவில் புதுக்கோவிலடி இல்லத்தில் நடைபெறும்.

உறவினர்கள், நண்பர்கள் இவ்வறிவித்தலை ஏற்றுக் கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்ளுகின்றோம்.

தகவல்:
இ- இரத்தினசபாதிக்குருக்கள்,
கொக்குவில்.

4311

## ஆர்ப்பாட்ட வன்முறை

# பாகிஸ்தானில் 14 பொலிஸார் உட்பட 27 பேர் பலி!

இஸ்லாமாபாத், ஜூலை 8
தென்கிழக்கு பாகிஸ்தானில் இடம்பெற்றவன்முறைச் சம்பவமொன்றில் 27 பேர் கொல்லப்பட்டனர். இவர்களில் 14 பேர் பொலிசார் என்று அறிவிக்கப்பட்டது கடந்த சனிக்கிழமை இச் சம்பவம் இடம்பெற்றது

தென்கிழக்கு பாகிஸ்தானிலுள்ள கொற்ரா என்ற நகரில் பாகிஸ்தானிய 'ஷியாட்' முஸ்லிம்கள் தமக்கு கூடுதல் அதிகாரம்வழங்கப்படவேண்டுமெனக் கோரி ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்தினர்.

இந்த ஆர்ப்பாட்டத்தை கலைக்கப் பொலிஸார் முற்பட்டபோதே மேற்குறிப்பிட்ட உயிர்ச்சேதங்கள் ஏற்பட்டன. எட்டுப் பேர் வரை காயமடைந்தனர் என்று தெரிவிக்கப்பட்டது

பாகிஸ்தானில் பொலிஸார் மீது அண்மைக் காலங்களில் நிகழ்த்தப்பட்ட ஒரு பெரும் தாக்குதல் சம்பவம் இதுவென்று அறிவிக்கப்பட்டது.

இச் சம்பவத்தையடுத்து தமது சகாக்களுக்கு அஞ்சலி தெரிவிக்கும்வகையிலும் தாக்குதல்களைக் கண்டிக்கும்வகையிலும் கொற்ரா நகரத்தைச் சேர்ந்த பொலிஸார் அனைவரும் வேலைநிறுத்தத்தில் இறங்கியுள்ளனர்.

குழப்ப நிலைமைகளை சமாளிக்கவென ஓரளவு இராணுவப்படை கொற்ராவுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. [கி]

# விபத்தில் ஐந்து டாக்டர்கள் பலி!

புதுடில்லி, ஜூலை, 8
ஹரியாணுமாநிலத்தில் ஐந்து டாக்டர்கள் விபத்தொன்றில் ஸ்தலத்திலேயே கொல்லப்பட்டனர். இச்சம்பவம் நேற்று இடம்பெற்றது.

ஹரியாணுவின் குருஷேஸ்த்திரா நகருக்கு 40 கிலோ மீட்டர்கள் தொலைவில் உள்ள கிராமமொன்றுக்கு இளம்பிள்ளைவாத தடுப்பு வைத்திய முகாமொன்றை நடத்துவதற்கு இந்த வைத்தியர் கோஷ்டி சென்றுகொண்டிருந்தது.

அப்போது இந்தக் கோஷ்டியின் ஜீப் வண்டியுடன் பயணிகள் பஸ் வண்டி ஒன்று மோதியதிலேயே இவர்கள் 5 பேரும் ஸ்தலத்திலேயே கொல்லப்பட்டனர் என்று கூறப்பட்டது. [கி]

## காணுமல் போன இந்திய கப்பல்களில்

# 48 சிப்பந்திகள் கடமையிலிருந்தனராம்!

## தேடுதல் பணி கைவிடப்பட்டது!!

சென்னை, ஜூலை 8
கடந்த வாரம் கொழும்புக் கடல் பகுதிக்கு அண்மையில் காணுமல்போன இரு இந்தியக் கப்பல்களில் 48 பேர் பணிபுரிந்தனர் என்று அறிவிக்கப்பட்டது. இந்த ஊழியர்களும் அக்கப்பல்களுடனேயே மறைந்துள்ளனர் என்றும் கூறப்பட்டது.

இந்திய கடற்படையினரும், கரையோரக் காவல் படையினரும் இந்த இரு கப்பல்களையும் தேடும் பணிகளை விரிவாக மேற்கொண்டனர். ஆயினும் அவர்களால் அக் கப்பல்களையோ அல்லது அதிலிருந்த பணியாட்களையோ கண்டு பிடிக்க முடியவில்லை.

சீரற்ற காலநிலைகாரணமாக அந்த இரு சரக்குக் கப்பல்களும் கடலில் மூழ்கியிருக்கலாமென அஞ்சப்படுகின்றது. இவை காணுமல்போய் ஐந்து தினங்களுக்குப்பின்னரே இவற்றின் சொந்தக்காரர்கள் இது பற்றி கடற்படையினரிடம் புகார் செய்தனர். தொடர்ந்து உடனடியாக தேடுதல்கள் ஆரம்பமானபோதிலும் பயன் எதுவும் கிடைக்கவில்லை.

ஒரு பெரும் கப்பல் நீரில் மூழ்கத் தொடங்குமாணுல் 24 மணி நேரத்தின் பின்னரே அது முழுஅளவில் நீரினுள் மறையும். எனவே கப்பல் மூழ்கும் நிலை காணப்பட்டால் 24 மணி நேரத்தில் அதில் உள்ள சிப்பந்திகளால் தற்காப்பு முயற்சிகளில் இறங்க முடியும்.

இக் கப்பல்களைப் பொறுத்தவரை அதன் சிப்பந்திகள் தற்காப்பு முயற்சிகளில் இறங்கியிருந்தாலும் மோசமான காலநிலை காரணமாக நீரில் அடித்துச்செல்லப்பட்டிருக்கலாம் என்று தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை சீரற்ற காலநிலையினுல் 'சாகர்பிரிததி' என்ற இன்னுமொரு இந்தியக் கப்பலும் அராபிக் கடலில் சேதமடைந்தது இக் கப்பல் இந்திய எண்ணெய் நிலவாயுக் கமிஷனுக்குச் சொந்தமானதாகும் தற்போது இக்கப்பலை செப்பனிடும் வேலைகள் துபாயில் நடைபெறுகின்றது (கி)

## விம்பிள்டன் டென்னிஸ்———

# 17வயது பொரிஸ்பேக்கர் சாம்பியன்!

லண்டன், ஜூலை 8
விம்பிள்டன் டென்னிஸ் சுற்றுப் போட்டிகளின் வரலாற்றில் இந்த ஆண்டு முதல்தடவையாக மேற்கு ஜெர்மனியைச் சேர்ந்தவரும் வயதில் மிகக் குறைந்தவருமான பொரிஸ்பேக்கர் சாம்பியன் பட்டத்தை சுவீகரித்தார்..

17 வயதான பொரிஸ் பேக்கர், தென்னுபிரிக்காவில் பிறந்து அமெரிக்கப் பிரஜையான கெவின்கரன் என்ற பிரபல டென்னிஸ் வீரரை (வயது 27) பிரமிக்கத்தக்க வகையில் தோற்கடித்தார்.

6-3, 6-7, 7-6, 6-4 என்ற செட்டுக்களில் பொரிஸ் பேக்கர் வெற்றிபெற்ருர் 3 மணித்தியாலங்கள் 18 நிமிட நேரம் இந்த இறுதிப்போட்டி இடம்பெற்றது.

கெவின்கரன் ஏற்கனவே பல விம்பிள்டன் முன்னணி ஆட்டக்காரர்களை தோற்கடித்தவர் இதனுல் இவர் மிக வயதில் குறைந்தவரும், விம்பிள்டன் அனுபவம் போதியளவு இல்லாதவருமான பொரிஸ்பேக்கரை இலகுவில்தோற்கடிக்கலாம் என்றே பலரும் எதிர்பார்த்தனர்.

ஆனுல் பொரிஸ்பேக்கர் வியப்புக்குரிய முறையில் கெவின்கரனைத் தோற்கடித்தார்.

வழமையான விம்பிள்டன் பந்தயங்களில் ஏற்கனவே சாம்பியன் பட்டத்தை வைத்திருப்பவரே இறுதிப் போட்டிவரை முன்னேறி வருவதுண்டு ஆனுல் இம்முறை கடந்த 4 வருடகால விம்பிள்டன் சாம்பியன் ஜோன் மக்கன்ரோ அரைஇறுதிப் போட்டியிலேயே மண்கவ்விஞர் என்பது குறிப்பிடத்தக்கது. (கி)

## பயிற்சி கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)
கோப்பாய் வட்டாரக் கல்வி மூலவள நிலையம் நடாத்தும் ஆரம்ப பிரிவு ஆங்கில ஆசிரியர்களுக்கான ஆங்கிலப் பாலர் பாடல் பயிற்சிக் கருத்தரங்கு இன்று அச்சுவேலி புனித திரேசா மகளிர் வித்தியாலயத்தில் கோப்பாய் வட்டாரக் கல்வி அதிகாரியும் கோப்பாய் கல்வி மூலவள நிலையத்தலைவருமாகிய திரு ஆ. வ. தங்கராசா தலைமையில் நடைபெறுகின்றது

இக் கருத்தரங்கில் ஆங்கில வட்டாரக் கல்வி அதிகாரி திரு ஆர் கே. குலசேகரம், ஆங்கில சேவைக்காலப் பயிற்சி ஆலோசகர் திரு எஸ் தெய்வதவபாலன் ஆகியோர் கருத்துரை வழங்குகின்றனர் இக் கருத்தரங்கில் கோப்பாய் வட்டாரத்திலுள்ள ஐம்பத்து மூன்று பாடசாலைகளின் ஆசிரியர்களும் கலந்து கொள்கின்றனர். சகல ஒழுங்குகளையும் கோப்பாய் வட்டாரக் கல்வி மூலவள நிலையப் பொறுப்பதிகாரி திரு. எஸ் சி எஸ் சிதம்பரநாதன் மேற்கொண்டுள்ளார்.

## கோப்பாய் கல்வி வட்டாரத்தில்

# 22 பாடசாலைகள் தரமுயர்த்தப்படவுள்ளன

(மாவிட்டபுரம்)
''கல்வி வலயத்திட்டத்தின் கீழ் பாடசாலைகள் அபிவிருத்தி செய்யப்படவுள்ளன. ஆனுல் கல்வித்திணைக்களமே எல்லாவற்றையும் செய்யுமென எதிர்பார்க்காமல் பெற்ருேரின் பங்களிப்பிலேயே பாடசாலையின் வளர்ச்சியும் பிள்ளைகளின் உயர்ச்சியும் தங்கியுள்ளது.'' இவ்வாறு வசாவிளான் ருே. க. த. க. பாடசாலை அபிவிருத்திச்சங்கக் கூட்டத்தில் கோப்பாய் வட்டாரக் கல்வியதிகாரி திரு ஆ. வ. தங்கராசா கூறிஞர்.

பாடசாலை அதிபர் திருமதி ம. பொன்னையா தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் அவர் மேலும் பேசுகையில், ''கல்விவலயத்திட்டன்கீழ் கோப்பாய் கல்வி வட்டாரத்தில் 22 பாடசாலைகள் தரமுயர்த்தப்படவுள்ளன. வசாவிளான் ருே. க. த. க. பாடசாலையிலும் அடுத்தாண்டுமுதல் 6ம் வகுப்பு நடத்த அங்கீகரிக்கப்பட்டுள்ளது'' என்று கூறிஞர்.

இக்கூட்டத்தில் பின்வருவோர் பாடசாலை அபிவிருத்திச்சங்க புதிய நிர்வாகிகளாகத் தெரிவுபெற்றுள்ளனர்.

தலைவர் திருமதி ம. பொன்னையா (அதிபர்), செயலாளர்: திரு க. ஆனந்தராசா, பொருளாளர்: திரு த. இராசலிங்கம். 10 பேர் கொண்ட நிர்வாகசபையும் தெரிவுசெய்யப்பட்டது.

# நிருபரின் மோட்டார்சைக்கிள் கைக்கடிகாரம் கொள்ளை!

(யாழ்ப்பாணம்)
யாழ்ப்பாணத்திலுள்ள பத்திரிகை நிருபர் ஒருவரின் மோட்டார் சைக்கிளும், கைக்கடிகாரமும் இனந்தெரியாத நபர்களினுல் கொள்ளையடிக்கப்பட்டுள்ளது.

கடந்த வெள்ளிக்கிழமை இரவு 8 மணியளவில் யாழ். நகரிலுள்ள பத்திரிகை கிளைக்காரியாலத்திலிருந்து வீடுதிரும்பிக்கொண்டிருந்தபோது இக்கொள்ளை நடந்ததாக கூறப்படுகிறது.

புத்தூர் சந்தியில் இனந்தெரியாத மூவர் வழிமறித்து மோட்டார் சைக்கிள் தங்களுக்கு தேவையென்றும் மறுநாள்காலை இருந்த இடத்தில் ஒப்படைப்பதாகவும் தெரிவித்தனராம்.

செய்திகள் சேகரிப்பதற்கு மோட்டார் சைக்கிள் தமக்கு அவசியம் தேவையென்றும். சுமார் 15 நிமிடம்வரை நிருபர் அவர்களிடம் விபரமாக தெரிவித்ததாகவும் கூறப்படுகிறது

இயக்கமொன்றின் பெயரைச்சொல்லி மீண்டும் மோட்டார் சைக்கிளை தருமாறு வலியுறுத்திஞர்களாம்,

மோட்டார் சைக்கிளை கொள்ளையடித்து அதில் ஏறியபின் ஒருவர் நிருபரின் கைக்கடிகாரத்தையும் பறித்துக்கொண்டு சென்றதாகவும் கூறப்படுகிறது. (க)

# கிளிநொச்சியில் நிகழ்ந்த இருநூல்கள் வெளியீடு

தொகுப்பு கே. வி. கே. திருலோகமூர்த்தி

கிளிநொச்சியின் ஆன்மீக, கலை, இலககியப் பணிகளில் தம்மைமிகவும்ஈடுபடுத்திவருபவரும் பிரபல எழுத்தாளருமான கோப்பாய்-சிவத்தின் இரண்டு நூல்கள் அண்மையில் கிளிநொச்சியில் வெளியிட்டு வைக்கப்பட்டன.

கோப்பாய் சிவத்தின் திறமையை முன்வைப்பதாக மட்டுமன்றி, கிளிநொச்சிப்பகுதியின் இலக்கிய ஆர்வத்தை வெளிக்காட்டுவதாயும் அமைந்த இந்தவிழா அதனை ஏற்பாடு செய்த கிளிநொச்சிப் பத்திரிகையாளர் வாசகர் நலன்புரிச் சங்கத்தினருக்குப் பெருவெற்றியைத் தேடித்தந்ததெனலாம்.

கடந்த 3ம் திகதி கிளிநொச்சி கனிஷ்ட மகாவித்தியாலய மண்டபத்தில் நடந்த இக்கூட்டத்திற்கு சுமார் 400 பேர் வரையில் வந்து குழுமியிருந்தனர் பத்திரிகையாளர் வாசகர் நலன்புரிச்சங்கத் தலைவர் டாக்டர் கே. வி கே திருலோகமூர்த்தி இக்கூட்டத்துக்குத் தலைமை தாங்கிஞர்.

இன்றைய காலகட்டத்தில் கலைநிகழ்ச்சிகள் எதுவும் இல்லாத இப்படியானதொரு இலக்கியக் கூட்டத்துக்கு இத்தனைபேர் வந்திருந்தது பெருமைக்குரிய விஷயமெனப் பலரும் பேசிக் கொண்டனர்

பிற்பகல் 2-30 மணியளவில் கிளிநொச்சி உதவி அரசாங்க அதிபர் (தலைமைப்பீடம்) திரு. எஸ். அமிர்தலிங்கம் மங்கள விளக்கேற்றி ஆசியுரை வழங்கி விழாவைத் தொடக்கிவைக்க உதவி அரசாங்க அதிபரும் பிரபல எழுத்தாளருமான திரு க. குணராசா (செங்கை (ஆழியான்) சிறப்புரை வழங்கிஞர்.

பிரதம நீர்ப்பாசன பொறியியலாளர் திரு. ச. சிவகுருநாதன், முன்னுள் மாவட்ட சபை உறுப்பினர் திரு. இ. கிருஷ்ணராசா, இலங்கை வங்கி முகாமையாளர் திரு. என் சிவன், மாவட்ட வைத்திய அதிகாரி திரு. பொ. நவரத்தினராசா ஆகியோர் வழங்கிய வாழ்த்துரைகள் வெறும் வாழ்த்துக்களாக இல்லாமல் சிறந்த இலக்கியச் சிற்றுரைகளாக அமைந்தன.

''கலைத்துறை சார்ந்த எங்களுக்கு மட்டுமே இலக்கியமும் தமிழ்ப்பேச்சும் கைவரும் என நான் நினைத்தது தவறு என்பதை இங்குள்ள பொறியியலாளர்கள் மற்றும் விஞ்ஞான தொழில்நுட்பத்துறை சார்ந்த அதிகாரிகள் நிரூபித்துள்ளனர்'' என்று திரு. செங்கைஆழியான் தமதுரையில் பாராட்டியது இங்கு குறிப்பிடத்தக்கது.

யாழ் இலக்கிய வட்டத் தலைவர் சசிபாரதி சு. சபாரத்தினம் பாராட்டுரை வழங்கிஞர்.

இதையடுத்துக் கோப்பாய் சிவம் எழுதிய இருநூல்களும் வெளியிட்டு வைக்கப்பட்டன. ''இலங்கையில் தமிழ்ப் பத்திரிகைகள், சஞ்சிகைகள்'' என்ற தமிழியல் ஆய்வுக் கையேட்டினை அந்நூல் வெளிவருவதற்குக் காரணகர்த்தராக இருந்த பிரதி நீர்ப்பாசனப் பணிப்பாளர் திரு. ம. சபாரத்தினம் வெளியிட்டு வைக்க டாக்டர் கை. ஸ்ரீரஞ்சன் முதற்பிரதியைப் பெற்றுக் கொண்டார்.

இந்நூலின் சிறப்புப் பிரதிகளை நீர்ப்பாசனத் திணைக்களத்தைச் சேர்ந்த திரு. க சிவரத்தினம், திரு கி சச்சிதானந்தம் ஆகியோர் பெற்றுக் கொண்டனர்.

இலங்கையில் இதுவரை வெளியிடப்பட்ட சுமார் 375 தமிழ்ப் பத்திரிகைகள் சஞ்சிகைகள் பற்றிய தகவல்களும்

[5-ம் பக்கம் பார்க்க]

**மணிவாக்கு**

பாலரொடு பேயர் பித்தர்
பான்மையென நிற்பதுவே
சீலமிகு ஞானியர்தஞ்
செய்கை பராபரமே

— தாயுமானவர்

# நமதுநோக்கு

## யாழ். பெரியாஸ்பத்திரி வளவில் 'எலும்புத் துண்டு'?

1982ம் ஆண்டு ஒரு நன்னாளில் யாழ் பெரியாஸ்பத்திரி வளவில் ஐந்து மாடிக் கட்டிடம் கட்டுவதற்கு அடிக்கல் நாட்டப்பட்டது.

போதனா வைத்தியசாலையாக இப்பெருங் கட்டிடம் இயங்குவதே நோக்கமாகக் கூறப்பட்டது.

யாழ். மாவட்ட அபிவிருத்திசபைமூலம் எம்.பி.க்களுக்கு ஒதுக்கப்பட்ட பன்முகப்படுத்தப்பட்ட நிதியிலிருந்து இத்திட்டம் உருவானதால் தலைவர் திரு. சு. நடராசா அடிக்கல்லை அன்று நாட்டிவைத்தார்.

இதுகாறும் பெரியாஸ்பத்திரியில் நடைபெற்ற பல துன்பியல் நாடகங்களில் அடிக்கல் அகப்படாதிருந்து தப்பியது தெய்வாதீனமென்றே கொள்ள வேண்டும்.

ஆண்டவன் திட்டம் என்னவோ, அங்கு பொறுமையுடன் காத்திருக்கும் இக்கல் இன்று வேறொரு கதை சொல்கிறது.

உத்தேசித்திருந்த இந்த ஐந்துமாடிக் கட்டிடத்துக்கு 285 லட்சம் ரூபா ஒதுக்கப்பட்டது மட்டுமல்ல; இதற்கு மந்திரிசபை அங்கீகாரமும் வழங்கியுள்ளது.

இது ஒரு முக்கிய திருப்பம்; இருப்பினும் கட்டிடம் எவ்வளவு விரைவில் கட்டப்படும்? நிதிப்பற்றும் கட்டிடம் தாமதிக்கப்படும் என்ற அச்சம் இருக்கத்தான் செய்யும்; அன்று இதைக் கட்டத்தொடங்கியிருந்தால் இன்று யாழ்ப்பாண மருத்துவம் மட்டுமல்ல, மருத்துவக் கல்லூரியின் தரமும் பன்மடங்கு உயர்ந்திருக்கும்.

வெளியேறும் வைத்திய நிபுணர்கள், பேராசிரியர்கள் விரக்தியடையாது சேவையில் தொடர்ந்திருப்பார்கள்.

கமரில் விழுந்த பால்பற்றிப் பேசுவது வீண்; என்றாலும் இவ்வித தடைகள் இன்னும் உண்டோ. அடிக்கல் எலும்புத்துண்டாக மாறிவிட்டால் பயன் என்ன?

ஒருபக்கம் அரசினர் போதனா வைத்தியசாலை என்றால் மறுபக்கம் தனியார் மருத்துவக் கல்லூரி என்ற பிரசார செய்தி. எது உண்மையில் முந்தும்? சொல்ல முடியாது.

கல்லு எலும்புத் துண்டாக முன்னேறினால், மருத்துவக் கல்லூரிக்கு அவசியமான எலும்புக்கோவையை தனியார் மருத்துவசாலை எட்டிப் பிடிக்க முடியும்.

அருமந்த இ.போ. ச. பஸ் சேவை இன்றிருக்கும் நிலையைநினைந்துருக கிடைத்திருக்கும் கசப்பான அனுபவம் தனியார் மினி பஸ் சேவை. அரசை நாம் இந்த விடயத்தில் இனப்பாகுபாடு என்ற குற்றத்துக்குள்ளாக்குவது நியாயமாகாது.

எந்த மக்களும் சிங்களம், தமிழ், முஸ்லிம் ஆண், பெண் அனைவரும் எவ்வித பேதமுமின்றி தலைகுனிந்து நிற்கவேண்டிய நிலையை தனியார் பஸ்சேவை ஏற்படுத்தியுள்ளது.

பாடசாலைகள் பாழ்போவதால் அதிக நட்டமா? எந்தக் கலவரத்திலும் தனியார் திண்ணைப் பாடசாலைகள் தவறாது தினந்தோறும் நடைபெறுகின்றன.

எனவே இன்று யாழ். பெரியாஸ்பத்திரிக்கு கிடைக்கவிருக்கும் ஐந்து மாடி போதனா வைத்தியசாலை இன்றைய போராட்டத்தால், போர் நிறுத்தத்தால் கிடைத்த எலும்புத்துண்டு என்று வசைபாட இடமளிக்கப்படாது.

யாழ். பல்கலைக்கழகத்துக்கு பூரண ரூபமளிக்க வல்ல, விவசாயபீடம், பொறியியல்பீடம், உறக்கத்தில் போய்விட்டன. இவற்றிற்குரிய திட்டங்கள் புத்தகரூபமாக வெளியிடப்பட்டன. இவற்றைப் புரியும் ஆற்றல் பெற்றவர்கள் இவை எங்கே இருக்கின்றன? என்று பார்க்க ஆவல் படுவார்கள்.

அதேபோல மருத்துவத்துறை இயன்ற அளவிற்கு செயற்படத் தொடங்கிய போதும் இரண்டாவது முறை மருத்துவ பட்டதாரிகள் வெளியேறும் நிலையில் போதனாவைத்தியசாலையும், அதற்குரிய தளபாடங்களும் உபகரணங்களும் இதுவரை தாமதித்திருந்தது எதற்காக?

யாழ். பல்கலைக்கழகம் வளாகமாக ஆரம்பமானது; இன்று பத்து வருடம் பூர்த்தியாய்விட்டது; இன்றைய சூழ்நிலையில் இதன் முன்னேற்றத்துக்கு, குறிப்பாக இங்கு வாழும் தமிழ்மக்கள் உறுதுணையாக இருக்க வேண்டும்; உபகாரம் செய்யாதிருந்தாலும் அபகாரம் செய்யாதிருப்பது அரிதினும் அரிது. பொறுப்பற்ற கண்டனங்கள் பயனற்றவை. மனநோயின் அறிகுறிகள்.

மருத்துவப் பட்டத்தையும் பல்கலைக்கழகநிர்வாகத்தையும் பரிகாசம்செய்யும் அறிவிலிகள் வீட்டுக்குள் இருந்தால் நாட்டின் ஆட்சியாளரின் அசமந்தம், தேனும்பாலும் போலாகும்.

எத்தனை குறைஉயிர்ச் சடலங்களைக் கண்டு அஞ்சாத நாம் எலும்புத்துண்டுக்கு எடுபடமாட்டோம்.

மகாநாடுகள் எவ்வாறு அமைந்தாலும் ஆட்சியின் பொறுப்பான கடமைகள் கைவிடப்பட்டால் நாம் மட்டுமல்ல நாடே அதற்கு தீவிர நடவடிக்கைகளில் ஈடுபடுவது தவிர்க்கமுடியாது போய்விடும்.

---

## இலங்கைத்தமிழர்கள்—
## தம்மைத்தாம் நிர்வகிக்கும் நியாயமான வாய்ப்புகள் வழங்கப்படவேண்டும்!

**இந்து பத்திரிகை கருத்து**

இலங்கையின் இனப்பிரச்னை இப்பிராந்தியத்தில் மீளாத் துயரத்தையே ஏற்படுத்தியுள்ளது. பல உயிரிழப்புக்களுடன் அப்பாவி மக்களுக்கு பெரும் இன்னல்களும் இடர்பாடுகளும் ஏற்பட்டுள்ளன. இவர்களில் பலர் தமது வீடு, வாசல், சொத்துக்களை இழந்து பாக்கு நீரிணையையும் கடந்து இந்தியாவில் அகதிகளாகத் தஞ்சம்புகவேண்டிய நிர்ப்பந்தத்துக்குள்ளாகினர்.

### ஆயுதத்தை கீழே போட்டு யுத்த நிறுத்தத்தை மேற்கொள்வதால் சமதானம் ஏற்பட்டுவிடாது

அதுமட்டுமல்ல இலங்கை தனது சக்தியையும் இயற்கை வளத்தையும் செறிவையும் அபிவிருத்திக்கு முரணான வழியில் பயன்படுத்தவேண்டிய நிலையிலேயே தற்போது இருக்கின்றது. இவற்றுக்கெல்லாம் உடனடியாக ஒரு முடிவு கட்டப்படவேண்டும்.

### இந்திய உதவி

ஐக்கிய இலங்கைக்கு உட்பட்ட ரீதியில் இலங்கைத் தமிழ் மக்களின் பிரச்னைக்கு சமாதானமான அரசியல் தீர்வு காண்பதற்கு உதவியாக இந்தியா தனது நல்லெண்ண முயற்சிகளை கடந்த 20 மாதங்களாக நல்கி வருகிறது.

கடந்த காலத்தில் என்ன தான் நடந்திருப்பினும் இன்றைய சூழ்நிலையில் இந்தியாவின் நல்லெண்ணமுயற்சிகளைப் பயன்படுத்தி பிரச்னைக்குத் தீர்வு காண்பதே இலங்கை அரசினதும் மக்களினதும் தலையாய கடமையாகும்.

இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தியும் இலங்கை ஜனாதிபதி ஜெயவர்த்தனவும் புதுடில்லியில் நடத்திய உச்சிமகாநாட்டின் இறுதியில் வெளியிடப்பட்ட கூட்டறிக்கை இந்த அடிப்படையிலேயே அமைந்திருந்தன.

இலங்கை மக்கள் சகலரையும் ஒற்றுமையாக வாழவைக்கக்கூடிய விதத்தில் இலங்கை இனப்பிரச்னைக்கு சமாதான முறையில் தீர்வு காணப்படவேண்டும் என்பதில் இந்தியா ஜனநாயக ரீதியில் மிகுந்த அக்கறை கொண்டுள்ளது.

### வடக்கு, கிழக்கு மக்கள் உயிர்நாடியை அழிக்கும் கொடூரம் தணிய வேண்டும்!

### கொடூரம் தணிக்கப்பட வேண்டும்

இலங்கையில் வடக்கு கிழக்கு மாகாணங்களைச் சேர்ந்த மக்களின் சமூக வாழ்வின் உயிர் நாடியையே அழிக்கும் கொடூரச் செயல்கள் தணிக்கப்பட வேண்டும். துப்பாக்கிகளைக் கீழே போடுவதையோ, யுத்த நிறுத்தத்தைக் கடைப்பிடிப்பதையோவிட சகல விதமான வன்செயல்களையும் தணித்துக் கொள்வதே இதற்குரிய உண்மையான வழியாகும். அதே வேளையில் பயனுள்ள அரசியல் பேச்சுவார்த்தைக்குரிய சூழ்நிலையை உருவாக்கவும் வேண்டும்.

இவ்வாறு பொருத்தமான சூழ்நிலை ஏற்படுத்தப்படாவிடின் வன்செயல் தணிப்பின் பின்பும் நிலைமை மோசமடையக்கூடும்.

### சகலதரப்பும் ஏற்கவேண்டும்

இலங்கை ஜனாதிபதி மீண்டும் மீண்டும் அதிகாரப் பரவலாக்கல் அமைப்பான மாவட்ட சபை ஆட்சி தமிழ் மக்களினதும் தமிழ்த் தலைவர்களினதும் எதிர்பார்ப்புக்களை சற்றும் அணுகவே இல்லை.

எனினும் சிறந்த பலனளிக்கக்கூடிய அரசியல் பேச்சுவார்த்தைகளுக்கான சூழ்நிலை ஏற்படுத்தப்படவேண்டும். அதே சமயம் சகல தரப்பினராலும் ஏற்றுக்கொள்ளக்கூடிய பயனுள்ள கருத்துக்களும் ஆலோசனைகளும் உயர்மட்டத்தில் சமர்ப்பிக்கப்படவேண்டும்.

இலங்கைத் தமிழ் மக்களை இரண்டாந்தரப் பிரஜைகளாக நடத்துவதானது இனப்பிரச்னை சிக்கலிலிருந்து அந்த நாட்டை மீட்பதற்கு வழியல்ல.

ஐக்கிய இலங்கை என்ற அமைப்பின் கீழ் தமிழ்மக்களுக்கு தம்மைத் தாமே நிர்வகிக்கக்கூடிய நியாயபூர்வமான வாய்ப்புக்களை வழங்குவதே அதற்குரிய வழியாகும். அதுவும் அந்த நிர்வாகத்தின் மூலம் அவர்களின் உயிருக்கும் உடைமைகளுக்கும் ஜீவனோபாயத்திற்கும் பாதுகாப்பு அளிப்பதோடு அரசியல் பொருளாதார, கலாச்சார அபிவிருத்திக்கும் வழிசெய்யப்படவேண்டும் என்றும் 'இந்து' பத்திரிகை விருப்பம் தெரிவித்துள்ளது.

---

## உலகில் இலங்கை 25-வது வறிய நாடு
### 121-வது செல்வ நாடு

உலகில் 25-வது வறிய நாடாக இலங்கை விளங்குகின்றது மறுபுறத்தில் கூறுவதானால் உலகின் 121-வது செல்வந்த நாடு இலங்கை எனலாம்!

உலக வங்கி வெளியிட்டுள்ள 1985-ம் ஆண்டுக்கான அறிக்கையொன்றிலேயே இத்தகவல் வெளியிடப்பட்டுள்ளது.

"குறைந்த வருமானப் பொருளாதாரத்துடன் அபிவிருத்தியடைந்துவரும் ஒரு நாடு" என்று இலங்கை மேலும் வர்ணிக்கப்பட்டுள்ளது.

இந்த அறிக்கையின்படி இலங்கையில் ஒருவரது வருடாந்த ஆள்வருமானம் 400 அமெரிக்க டாலர்களுக்கும் குறைவாகவே காணப்படுகின்றது.

அத்துடன் 1972ம் ஆண்டு முதல் 1882ம் ஆண்டு வரையிலான காலப்பகுதியில் கடன் பளுவுக்கு எதிராக சுமார் 2 சத வீதமே இலங்கையின் உற்பத்தி அதிகரித்திருப்பதாகவும் கூறப்பட்டது.

உலகில் மிக மோசமான வறியநாடாகபங்களாதேஷ் விளங்குகின்றது. இங்கு ஒருவரின் ஆள்வீத வருமானம் தலா 3000 ரூபாவாகவே இருக்கின்றது எனச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (130 அமெரிக்க டாலர்கள்)

### செல்வந்த நாடு

இதேவேளை உலகில் ஆள் வீதவருமானம் கூடிய முதலாவது செல்வந்த நாடாக ஐக்கிய அரபு இராச்சியம் விளங்குகின்றது (U A E)

உலக வங்கி அறிக்கையின் படி இந்தநாட்டில் ஒருவரது ஆள்வருமானம் தலா 22 870 ஆயிரம் டாலர்களாக இருக்கின்றது. (சுமார் 6லட்சத்து 26 ஆயிரத்து 100 ரூபா)

இரண்டாவது செல்வந்த நாடாக குவைத் விளங்குகின்றது. இதன் ஆள்வருமானம் தலா 17 880 அமெரிக்கடாலர்களாகும். (சுமார் 5 லட்சத்து 36 ஆயிரத்து 400 ரூபா)

இவற்றுக்கு மிக நெருக்கமாக சுவிற்சர்லாந்து, நோர்வே ஆகிய நாடுகள் முறையே 16,290 டாலர்கள் 14,020 டாலர்கள் ஒருவருட ஆள்வருமானத்துடன் காணப்படுகின்றன [கி]

---

### ஓய்வூதியம் சேர்த்துபெறலாம்

[யாழ்ப்பாணம்]

தபாலகங்கள் மூலம் ஒய்வூதியம் பெறுபவர்களில் ஜூன் மாத ஓய்வூதியக் கொடுப்பனவுகளை சென்ற மாதம் பெற்றுக் கொள்ளாதவர்கள் அதனை ஜூலை மாத ஓய்வூதியங்களுடன் சேர்த்துப்பெறறுக்கொள்ளலாம்என அறிவிக்கப்பட்டுள்ளது.

---

### 8 பாடங்களிலும் விசேடசித்தி

[புலோலி]

1984-ம் ஆண்டிற்கான க. பொ. த. [சாதாரண] பரீட்சைக்கு பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியிலிருந்து தோற்றிய மாணவர்களில், புலோலி கிராமக்கோட்டடியைச் சேர்ந்த செல்வன் கே. கேதீஸ்வரனும், துன்னாலையைச் சேர்ந்த செல்வன் எஸ். சபேசனும் எட்டுப்பாடங்களிலும் விசேட சித்தியடைந்துள்ளனர்.

கடந்தவருடம் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி வகுப்பறைகள், நூலகம் என்பன தீக்கிரையாக்கப்பட்ட வன்செயல்களையடுத்து கல்லூரி ஒழுங்காக நடைபெறாதபோதிலும் இவ்விரு மாணவர்களும் எட்டுப்பாடங்களிலும் விசேட சித்தியைப் பெற்றது ஒரு சாதனையாகும் என்பதும் குறிப்பிடத்தக்கது.

பொதுசன நூலகம் யாழ்ப்பாணம்

### மண்டைதீவில் தபால் விநியோகம்

# சீராக நடைபெற

## நடவடிக்கை எடுக்கவும்

(மண்டைதீவு)

''ஏனைய இடங்களைப்போல் மண்டைதீவுத் தபால் விநியோகமும் சீராக நடைபெற வடபிராந்திய போக்குவரத்துச் சபை நடவடிக்கை எடுக்க வேண்டும்'' என்று மண்டைதீவு மறுமலர்ச்சி இயக்கம் வடபிராந்திய போக்குவரத்துச் சபைத் தலைவருக்கு அனுப்பி வைத்துள்ள அவசரக்கடிதம் ஒன்றில் தெரிவித்துள்ளது.

யாழ். நகரிலிருந்து மண்டைதீவுக் கிராமத்திற்கு நடைபெறும் இ. போ. ச. பஸ் சேவை சீராக இடம்பெறாததால் பாடசாலை மாணவர்கள் பாதிக்கப்பட்டதுடன், தபால் சேவையும் பாதிக்கப்பட்டுள்ளது.

ஏனைய உப தபால் நிலையங்களுக்கு ஒப்பந்த அடிப்படையில் பஸ்மூலம் தபால் விநியோகம் செய்யப்படுகிறது. ஆனால் மண்டைதீவு தபால் விநியோகம்செய்யும் பஸ்வண்டி இச்சேவையை நடத்தாததால் பொதுமக்களுக்கு ஒழுங்கான தபால் விநியோகம் நடைபெறாமல் இருக்கின்றது. எனவே குறித்த தபால்சேவைக்கான பஸ் சேவையை ஒழுங்காக நடத்தி உதவுக என்று அக்கடிதத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

## தபாலக ஒய்வூதியக் கொடுப்பனவுகள்

(யாழ்ப்பாணம்)

தபாலகங்கள் மூலம் வழங்கப்படும் ஜூன் மாதத்துக்கான ஓய்வூதியக்கொடுப்பனவுகள் யாழ் துரையப்பா விளையாட்டரங்கில் இம்மாதம் 15-ம் திகதி முதல் 23-ம் திகதி வரை வழங்கப்படும்.

ஓய்வூதியக் கொடுப்பனவு விபரங்கள் வருமாறு:

15-ம் திகதி நெடுந்தீவு, நயினாதீவு, அனலைதீவு, புங்குடுதீவு, வேலணை, வசாவிளான, அளவெட்டி, கைதடி.

16-ம் திகதி யாழ்ப்பாணம், வண்ணார்பண்ணை, வல்வெட்டித்துறை, ஊர்காவற்றுறை.

17-ம் திகதி கொக்குவில், சுன்னாகம், உரும்பராய், சங்கானை.

18-ம் திகதி அச்சுவேலி, வட்டுக்கோட்டை, தெல்லிப்பழை.

19-ம் திகதி கரவெட்டி, கோப்பாய், மானிப்பாய், கொடிகாமம்.

22-ம் திகதி பருத்தித்துறை, காங்கேசன்துறை, காரைநகர்

23-ம் திகதி யாழ்ப்பாணம், சாவகச்சேரி, சுழிபுரம்.

## கிளிநொச்சி ..

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

பட்டியலும் அடங்கிய இத்தொகுப்பு நூலுக்குப் பேராசிரியர் கலாநிதி அ. சண்முகதாஸ் அணிந்துரை வழங்கியுள்ளார்

ஆக்கவுரிமைகள் வியாபாரக் குறிகள் பதிவகம் நடத்திய சிறுகதைப் போட்டியில் பரிசு பெற்ற கோப்பாய் சிவத்தின் ஏழு கதைகளைப் பத்திரிகையாளர் வாசகர் நலன்புரிச் சங்கத்தினர்பதிப்பித்து நியாயமான போராட்டங்கள் என்ற பெயரில் வெளியிட்டனர். இந்நூலைக் கல்விஅதிகாரி எஸ். சோமசுந்தரம் வெளியிட்டு வைக்க டைபகுதி சர்வோதய இணைப்பாளர் திரு. க. கதிரமலை முதற்பிரதியைப் பெற்றுக் கொண்டார் இந்நூலின் சிறப்புப் பிரதிகளை வண எஸ் ஜெயநேசன் உதவி விவசாயப் பணிப்பாளர் திரு ச. த பத்மநாதன் பெற்றுக்கொண்டனர்

ஈழநாடு வாசகர் வட்டத் தலைவரும், இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்க நிதிச்செயலாளருமாகிய திரு. நா. சோதிநாதன், நீர்ப்பாசனத் திணைக்களத்தைச்சேர்ந்த திரு எஸ் எஸ். அச்சுதன்பிள்ளை, காணி அலுவலகத்தைச் சேர்ந்த திரு. இ. பத்மநாபஐயர், நீர்ப்பாசனப் பொறியியலாளர் திரு. த. சுப்பிரமணியம், விவசாயப் பயிற்சி நிலையத்தைச் சேர்ந்த திரு. சி. வன்னியகுலம் ஆகியோர் இரு நூல்களையும் பற்றி ஆய்வுரைகள் வழங்கினர்கள்

இறுதியில் நூலாசிரியர் கோப்பாய் சிவத்தின் பதிலுரையுடனும் பத்திரிகையாளர் வாசகர் நலன்புரிச்சங்க செயலாளர் திரு. சே. தீஸ்வரனின் நன்றியுரையுடனும் கூட்டம் இனிது நிறைவுற்றது.

இன்று கலை இலக்கியத்துறைகளில் கிளிநொச்சிப் பகுதி துரிதவளர்ச்சி பெறுகிறது என்று பேசிக்கொண்டு கலைந்த ரசிகர்களின் கரங்களில் இரண்டு நூல்களும் காணப்பட்டன.

## விளையாட்டுப் போட்டி

[சாவகச்சேரி]

கிளிநொச்சி இந்து மகாவித்தியாலயத்தின் வருடாந்த மெய்வல்லுனர் போட்டி எதிர்வரும் 16-ம் திகதி நடைபெற இருக்கின்றது.

## அஜந்தா இல்லம் முதலிடம்

(மாவிட்டபுரம்)

நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரி வருடாந்த மெய்வல்லுனர் போட்டியில் அஜந்தா இல்லம் முதலிடத்தைப் பெற்றுள்ளது.

கல்லூரி அதிபர் திரு. க. சிவசுப்பிரமணியம் தலைமையில் கல்லூரி மைதானத்தில் இடம் பெற்ற இப்போட்டியில் கைலாஸ் இல்லம் இரண்டாமிடத்தையும் சிகிரியா இல்லம் மூன்றுமிடத்தையும் பெற்றன

## ஓய்வுபெற்றார்

[கரவெட்டி]

கரவெட்டி யாக்கரு விநாயக வித்தியாலய அதிபரான திரு. மு. வேலுப்பிள்ளை தமது அறுபதாவது வயதில் 38 வருட கல்விப் பணியினை முடித்துக் கொண்டு ஓய்வுபெற்றார்.

இலங்கையின் பல பாகங்களிலும் பணியாற்றியஇவர் இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் ஆரம்பகால உறுப்பினராகி அதில் பல பதவிகளையும் வகித்துள்ளார்.

## ''ஆசிரியர்கள் சிறந்த பிரஜைகளை உருவாக்குகிறார்கள்''

(புலோலி)

''ஆசிரிய பணி தூய்மையான பணியாகும். இப்பணி கடவுளின் படைப்புத் தொழிலையொத்தது. எதிர்காலத்தில் சிறந்த நாட்டிற்கு சிறந்த பிரஜைகளை உருவாக்குவது ஆசிரியர்களின் தலையாய கடமையாகும். ஆசிரியத் தொழிலைச் சிறப்பாகச் செய்பவர்கள் சமூகத்தில் உயர்ந்த ஸ்தானத்தில் வைக்கப்படுவார்கள். இந்நிலையிலே பதவி உயர்வு பெற்று இடமாற்றம் பெற்றுச் செல்லும் அதிபர் திரு. வின்சென்ற் சிறந்த சேவையை வழங்கியுள்ளது பெருமைக்குரிதாகும்''

இவ்வாறு பருத்தித்துறை கலட்டி ஹேர்மன் கதோலிக்க கனிஷ்ட உயர் வித்தியாலயத்தில் அதிபராக 14 ஆண்டுகள் கடமையாற்றிப் பதவி உயர்வு பெற்று இடமாற்றம் பெற்றுச் சென்ற அதிபர் திரு. சி. வின்சென்றக்கு வித்தியாலய ஆசிரியர்கள் மாணவர்கள் பெற்றோர்களால் நடாத்தப்பட்ட பிரிவுபசார விழாவிலே கலந்து கொண்டு உரையாற்றிய பருத்தித்துறை பங்குத்தந்தை அருட்திரு. பொனிபோஸ் அடிகளார் குறிப்பிட்டார். விழாவிற்கு புதிய அதிபர் திரு. எம். சேவியர் தலைமை தாங்கினார்.

பருத்தித்துறை வட்டாரக் கல்வியதிகாரி திரு. பீ. சச்சிதானந்தம் உரையாற்றுகையில் அதிபர்கள் சிறந்த சேவைகளை யாற்றும் போதே பாடசாலைகள் சிறப்பாக இயங்கி மாணவர்கள் சிறந்த பிரஜைகளாக உருவாகமுடியும். பாடசாலை அதிபர்களின் பெயர் அவர்கள் செய்த சேவையைப் பொறுத்து நிலைத்து நிற்கும் அதிபர் திரு. வின்சென்ற் சிறந்த அதிபராகக் கடமையாற்றியுள்ளார் இவ்வித்தியாலயத்தின் அபிவிருத்தி கருதி பலநடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளார் என்றார்.

### ஆரம்ப சுகாதார சேவைகள்

## திட்டத்தை செயல்படுத்த மக்கள் ஒத்துழைப்பு வேண்டும்

(மாவிட்டபுரம்)

''ஆரம்ப சுகாதார சேவைகள் திட்டத்தைச் செயல்படுத்துவதற்கு மக்களின் ஒத்துழைப்பு மிகவும் அவசியமாகின்றது இத்திட்டம் சிறப்பாக செயல்படுத்தப்பட்டால் மக்கள் நோய்களினால் பாதிக்கப்படாமல் நீண்ட ஆயுளுடன் வாழமுடியும் ஆகவே பொது மக்கள் இதுவிடயத்தில் கவனம் கொள்ளவேண்டும்.''

இவ்வாறு காங்கேசன்துறை நடேஸ்வராக் கல்லூரி சந்திக்கருகாமையில் கிராம சுகாதார நிலையம் ஒன்றை திறந்துவைத்துப் பேசிய காங்கேசன்துறை சுகாதார வைத்திய அதிகாரி திரு. இ. தெய்வேந்திரன் கூறினார்.

திருமதி சந்திரவதி சிவரத்தினம் தலைமையில் நடைபெற்ற இவ்வைபவத்தில் காங்கேசன்துறை சுகாதாரப் பரிசோதகர் திரு. ரி மகாதேவன் பேசுகையில்: ''மக்களிடையே சுகாதார சேவைகளை மேற்கொள்வது மட்டுமன்றி சுகாதாரக் கல்வியையும் போதிக்கும் நிலையமாக இக்கிராம சுகாதார நிலையம் அமையும். சுகாதார கல்வியறிவு இருந்தால் மக்கள் தமது சுகாதாரத்தைப் பேணி உடல் நலத்தையும் பாதுகாக்க முடியும்'' என்றார்.

## ''மாணவர் கல்விக்கு பாலர் பாடசாலைகளின் அவசியம்''

(யாழ்ப்பாணம்)

''பாலர் பாடசாலைகள் தரமானவையாக இருந்தால்தான் எமது எதிர்காலச்சந்ததியினர் முறையான கல்வியைப் பெற முடியும். கல்விக்கு அத்திவாரமிடப்படுவது பாலர் பாடசாலைகள் ஆகும். அந்த அத்திவாரம் பலமானதாக இருந்தால்தான் கல்விஎன்னும் கட்டடம் இடிந்து விழாது உறுதியோடு நிற்கக்கூடியதாக இருக்கும். இதனை நாம் அனைவரும் நன்கு உணர்ந்து பாலர் பாடசாலைகளில் முக்கிய கவனம் செலுத்தி அவற்றை தரமுள்ளவையாக ஆக்க ஆவன செய்யவேண்டும்'' என கோப்பாய் கல்வி மூலவள நிலையப் பொறுப்பதிகாரி திரு எஸ் சி. எஸ். சிதம்பரநாதன் ஆவரங்கால் மத்திய பாலர் பாடசாலையின் வருடாந்த இல்ல விளையாட்டுப்போட்டியில் பிரதம விருந்தினராகக் கலந்து உரையாற்றுகையில் கூறினர்

மேலும் அவர் பேசுகையில் ''பாலர் பாடசாலைகளின் ஆசிரியர்கள் நன்கு பயிற்சிபெற்றவர்களாகவும், பாலர் பாடல்களைப் பாடக்கூடியவர்களாகவும் இருத்தல்வேண்டும். இப்பாடசாலையின் விளையாட்டுப் போட்டியில் வெளிக்காட்டப்பட்ட கட்டுப்பாடு, திறன் வெளிக்கொணர்தல், ஒழுங்குமுறை என்பனவற்றைப் பார்க்கும்போது இங்கு கற்பித்தலும் திறமையாகச் செயல்படுகின்றது'' என்றார் எஸ் சி. எஸ் சிதம்பரநாதன் சில பாலர் பாடல்புத்தகங்களை பாடசாலைப் பொறுப்பாசிரியையிடம் அன்பளிப்புச்செய்தார்.

இவ்விளையாட்டுப் போட்டிக்கு சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு முன்னாள் பிரதேச சபைத் தலைவர் திரு. சதா லோகேஸ்வரன் பேசுகையில், ''ஆவரங்கால் மத்திய பாடசாலை, ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாலயத்திற்கு ஊட்டல் பாடசாலையாக அமைந்துள்ளது இப்பாடசாலையின் வளர்ச்சிக்கு இங்குள்ள பெற்றோரின் அயராத ஒத்துழைப்பே காரணமாகும்'' எனக் கூறினார்.

இவ்வைபவத்தில் சிறப்பு விருந்தினர்களாக இ. கி. மி நிறுவன உதவி இயக்குநர் செல்வி அ. இராஜேஸ்வரி, அச்சுவேலி ப. நோ. கூ. சங்கத் தலைவர் திரு. தி. கமலநாதன், இ. மு. ச. தலைவர் திரு க. சின்னத்துரை, ஸ்ரீவிஷ்ணு வித்தியாலய அதிப திரு சா. பாலசிங்கம் ஆகியோர் கலந்து கொண்டனர் போட்டியில் வெற்றிபெற்றோருக்கான சான்றிதழ்களையும், பரிசில்களும் வழங்கப்பட்டன.

## வடமராட்சியில் எரிபொருள் தட்டுப்பாடு நீங்குகிறது!

[புலோலி]

வடமராட்சிப் பகுதியில் நிலவிவந்த எரிபொருள் பற்றாக்குறை நீங்கிவருகின்றது முதற்கட்டமாக வடமராட்சிப்பகுதியின் எரிபொருள் விற்பனைக்கு அதிகாரம்பெற்ற புலோலி ப. நோ. கூ. சங்கத்திற்கு 9000 லீற்றர் பெற்றோலும், 5 550 லீற்றர் டீசலும் 11,100 லீற்றர் மண்ணெண்ணெயும் வந்து சேர்ந்தன.

பெற்றோலும் டீசலும் கிராகோட்டடியிலுள்ள பு. ப. நோ. கூ. சங்க எரிபொருள் விற்பனவு நிலையத்தில் வைத்து வாகனங்களுக்கு வழங்கப்பட்டது. மண்ணெண்ணை ப. நோ. கூ. சங்கக்கிளைகள் மூலம் பொது மக்களுக்கு வழங்கப்பட்டுவருகின்றது

வடபிராந்திய போக்குவரத்துச்சபை பருத்தித்துறை டிப்போ தற்பொழுது பஸ் சேவைகளை போதியளவு நடத்திவருவதனால் வடமராட்சிப்பகுதியினை ஸ்தம்பித்திருந்த போக்குவரத்து வசதிகளும் ஒழுங்காகப் பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

## கசிப்பு உற்பத்தியாளர் பற்றிய விபரங்கள் சேகரிப்பு

[கொழும்புத்துறை]

கசிப்பு உற்பத்தி செய்பவர்கள், விற்பனை செய்பவர்கள் பற்றிய விபரங்கள் சேகரிக்கப்படவுள்ளன அண்மைக்காலத்தில் கசிப்பு உற்பத்தி அதிகரித்து வந்துள்ளமையை அடுத்துக் கசிப்பை முற்றாக ஒழித்துக் கட்ட நடவடிக்கையாகக் கசிப்பு உற்பத்தி விற்பனையாளர்களின் பெயர் விபரங்கள் திரட்டப்படுகின்றன.

இலங்கை பனம்பொருள் அபிவிருத்திச் சபைத் தலைவர் திரு க. நடராசா சகலபகுதிகளிலுமுள்ள உதவி அரசாங்க அதிபர்களையும், தென்கு பனம்பொருள் கூட்டுறவுச் சங்கங்களையும் அவ்வப்பகுதியிலுள்ள கசிப்பு உற்பத்தியாளர் விற்பனையாளர் சம்பந்தமான விபரங்களைத் திரட்டித் தருமாறு கேட்டுக்கொண்டுள்ளார்.

இது சம்பந்தமாக அவர் விடுத்துள்ள அறிக்கையொன்றில் கசிப்பினால் மனிதகுலத்துக்கு ஏற்பட்டுள்ள மாபெரும் தீமைபற்றி எச்சரித்துள்ளதுடன், கசிப்பினால் ஏற்படும் அழிவு பற்றியும், கசிப்பை ஒழிக்கவேண்டிய அவசியம் பற்றியும் பொது மக்களும், இளைஞர்களும் உணர்ந்திருப்பது பாராட்டுதற்குரியதென்றும், கசிப்பு ஒழிப்புப்பணியில் அனைவரும் ஈடுபட்டு ஒத்துழைப்பு வழங்கவேண்டுமென்றும் கேட்டுக் கொண்டுள்ளார்.

## குளிர்பிரதேச ஆசிரியர்க்கு விசேட சம்பள உயர்வு

(கொழும்பு)

குளிர் பிரதேசங்களில் வேலை செய்யும் ஆசிரியர்களுக்கு விசேட சம்பள உயர்வு வழங்கப்பட்டுள்ளது.

கடல்மட்டத்தில் இருந்து 4000 அடி உயரத்தில் வேலை செய்யும் ஆசிரியர்களுக்கு இந்த விசேட சம்பள உயர்வு வழங்கப்படவுள்ளது.

இவர்களின் அடிப்படைச் சம்பளத்தில் ஆறில் ஒரு பங்கு இவ்வாறு விசேட படியாக வழங்கப்படவுள்ளது.

## சைவப் புலவர் சங்க நிர்வாகிகள்

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கை சைவப் புலவர் சங்கத்தின் 24-ஆவது வருடாந்தப்பொதுக்கூட்டம் அண்மையில் நடைபெற்றது. புதுவருட நிர்வாகிகளாக பின்வருவோர் தெரிவுசெய்யப்பட்டனர்.

தலைவர்: வித்துவான் திரு. இ. திருநாவுக்கரசு, உபதலைவர்: சைவப்புலவர் திரு க. சிற்றம்பலம், செயலாளர்: சைவப்புலவர் திரு வ. கந்தசாமி, பொருளாளர்: நா. க. தங்கரத்தினம்.

# "சமய தீட்சை மனிதனை தூய்மையாக்கிறது"

(வண்ணுர்பண்ணே)

"ஆத்மீக உணர்வும் இறை நம்பிக்கையும், சமயநெறிகளும் கொண்டு வாழும் மனித சமுதாயமே துன்பமில்லாமல் வாழும் சக்தியைப் பெற்றுய்ய முடியும். இவற்றை அடைய சமயஅறிவும், சமயஅனுஷ்டானங்களும் பெறுவது மிகமுக்கியமானதாகும்."

இவ்வாறு கோப்பாய் ஸ்ரீசுப்பிரமுனிய கோட்டத்தில் சமய தீட்சையை ஆரம்பித்து வைத்து நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாசாரியசுவாமிகள் உரையாற்றுகையில் தெரிவித்தார்.

இவ்வைபவத்தில் சுப்பிரமுனியகோட்டத்தைச் சேர்ந்த சிறுவர்கள் பலர் சமயதீட்சை பெற்றனர். இத்தீட்சை வைபவத்தையடுத்து சுவாமிகள் தொடர்ந்து பேசுகையில், "இந்துசமயத்தின் தத்துவங்களையும், அதன் உண்மைகளையும் உணர்ந்து யோகசுவாமிகள் சிஷ்யர்களில் ஒருவராக மாறிய ஆங்கிலேயரான சுப்பிரமுனிய சுவாமிகள் இந்து சமயத்தின்மூலம் மக்கள் சிறப்பாக வாழ்ந்து உயர்வடையலாம் என்ற உண்மையை உலக அரங்கில் எடுத்துக் காட்டி வருகின்றார்.

சமயதீட்சையின்மூலம் உள்ளத்தையும் உடலையும் புனிதமாக மாற்றுவதுடன் அறிவுத் தெளிவையும் ஆத்மீகபலத்தையும் அடைய முடியும். இறைவனால் மனிதனுக்குக் கொடுக்கப்பட்டுள்ள சகலசக்திகளையும் மனிதன் பெறுவதற்கு சமயதீட்சையும் அவசியமானதொன்ருகும்' என்றார்.

இவ்வைபவத்தைத் தொடர்ந்து நடைபெற்ற சமயக் கருத்தரங்கு நிகழ்ச்சியை யாழ் மாவட்ட இந்து இளைஞர் பேரவைத்தலைவர் திரு. சி சண்முகலிங்கம் தொடக்கிவைத்தார் இந்து இளைஞர் பேரவைத் தொண்டர் பிரிவு இளைஞர்களும் ஸ்ரீசுப்பிரமுனிய கோட்ட தொண்டர் பிரிவு இளைஞர்களும் இதில் கலந்து கொண்டனர்.

## மகோற்சவம்

(கல்வியங்காடு)

நல்லூர்சட்ட நாதர்கோவில் மகோற்சவம் இம்மாதம் 12-ம் திகதி கொடியேற்று வைபவத்துடன் ஆரம்பமாகிறது.

21-ம் திகதி தேர்த்திருவிழாவும் 22-ல் தீர்த்தமும் 23-ல் பூங்காவனமும் நடைபெறும்.

## நவோத்ரசகஸ்ர சங்காபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

வண்ணை அருள்மிகு ஸ்ரீ செந்தில் கதிர்வேலாயுத சுவாமி கோவிலில் மணவாளக்கோலத்தை முன்னிட்டு இன்று செவ்வாய்க்கிழமை காலை 9-00 மணிக்கு நவோத்ரசகஸ்ர சங்காபிஷேகமும் தொடர்ந்து நியாசபூர்வ ஷண்முகார்ச்சனையும், தாராஹோமமும், தீபாராதனையும் நடைபெறும் நண்பகல் மகேஸ்வரபூஜையும், மாலை 4-30மணிக்கு திருக்கல்யாணமும், செந்தில் குமரன் வள்ளி தேவசேன சமேதராக உள்வீதி வலம்வருதலும் நடைபெறும.

# புதிய பாடவிதானம் 1986ல் நடைமுறைக்கு வரும்

(உடுவில்)

திருத்தி அமைக்கப்பட்ட புதிய பாட விதானம் 1986-ம் ஆண்டு ஜனவரி மாதத்தில் இருந்து பாடசாலைகளில் நடைமுறைப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை கல்வி அமைச்சு மேற்கொண்டுவருகன்றது.

அதன் ஆரம்பபடியாக, விஞ்ஞானம், கணிதம், சமூகக் கல்வி ஆகிய மூன்று பாடங்களுக்கு சேவைக்கால வலய மட்டத்தில் ஆசிரிய ஆலோசகர்களை தெரிவுசெய்து, வேலைத் திட்டத்தைநடைமுறைப்படுத்தும் நோக்குடன் போட்டிப் பரீட்சை ஒன்று நடாத்தப்பட உள்ளது.

வலய ஆசிரிய ஆலோசகர்களை தெரிவுசெய்வதற்கு தகைமைகளைக்கொண்ட ஆசிரியர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

# மாணவரின் திறமைக்கு கல்வி அதிகாரி பாராட்டு

(உடுவில்)

"நிரந்தரமான விளையாட்டு மைதானத்தை வைத்து பயிற்சி பெற்ற மாணவர்கள் நிறைந்த பாடசாலைகளிலே கூட விளையாட்டுப் போட்டிகளை சிறந்த முறையில் நடாத்துவது கஷ்டமாக இருக்கின்றது ஆனல் இப்பாடசாலைக்கோ நிரந்தா மைதானம் இல்லை. பயிற்சிபெற வாய்ப்பு இல்லை. இருந்தும் தற்காலிக மைதானத்தை அமைத்து அதில் உங்கள் விளையாட்டுத் திறமைகளை கட்டுப்பாட்டுடன் நடாத்தியுள்ளீர்கள். வருடம்தோறும் கல்வியில் சிறந்த பெறுபேறுகளை தோற்றுவிக்கும் இப்பாடசாலை மாணவர்கள் தமது கல்வித்திறமைபோல விளையாட்டுத் துறையிலும் முன்னணியில் திகழ்வதை நிரூபிக்கும் வகையில் செயல்பட்டுள்ள மாணவர்களின் செயலைப் பாராட்டவேண்டும்"

உடுவில் முருகமூர்த்தி வித்தியாசாலையின் வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டிகளுக்கு பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு சிறப்புரையாற்றிய மானிப்பாய் வட்டாரக் கல்வி அதிகாரி திரு. செ தனஞ்சயன் மேற்கண்டவாறு கூறினார்

இளைப்பாறிய அதிபர் திரு. வே. கந்தையா மங்கள விளக்கேற்றி விளையாட்டுப் போட்டிகளை ஆரம்பித்து வைத்தார்.

கல்வித்திணைக்கள கடன் வழங்குசபை செயலாளர் திரு. வே. சி. சிவபாலசிங்கம் பாடசாலைக்கொடியை ஏற்றிவைத்தார்.

பாடசாலை அதிபர் திரு. வை. யோகீஸ்வரன் இப்போட்டிகளுக்கு தலைமை வகித்து வரவேற்புரை நிகழ்த்தினர்

வட்டார உடற்கல்வி அதிகாரி திரு வ. கணேசலிங்கம் போட்டிகளில் வெற்றியீட்டிய மாணவர்களுக்கு பரிசில்களை வழங்கினர்.

விளையாட்டுப்போட்டிகளில் முதலிடத்தை மலைமகள் இல்லமும் இரண்டாம் இடத்தை திருமகள் இல்லமும் மூன்றுமிடத்தை கலைமகள் இல்லமும் பெற்றுக்கொண்டன.

## பொங்கல்

(யாழ்ப்பாணம்)

கொக்குவில் கோணுவளை ஸ்ரீவைரவர் ஆலயத்தின் வருடாந்த பொங்கல்விழா எதிர் வரும் 12ம் திகதி வெள்ளிக்கிழமை இடம்பெறும்.

## கீரிமலையில் சிரமதானம்

(மாவிட்டபுரம்)

கீரிமலையில் ஆடி அமாவாசை தீர்த்தற்திற்கு கூடும் பல்லாயிரக்கணக்கான பக்தர்களுககு உதவும் வகையில் கீரிமலைப் பிரதேசத்தை சிரமதானமூலம் கீரிமலை பிரஜைகள் குழுவினர் சிர்செய்துள்ளனர்

பாதுகாப்பு வலயத்தால் கீரிமலைக்கு பொதுமக்கள் வருகை குறைந்திருந்ததை அடுத்து இப்பகுதி அசுத்தமாக காட்சியளித்தது.

இதையடுத்து கீரிமலை பிரஜைகள் குழுவினர், தொண்டர்கள், அன்னையர் முன்னனி, நகுலேஸ்வர வித்தியாலய மாணவ மாணவிகள் ஆகியோரின் உதவியுடன் பஸ்நிலையம் தீர்த்தக்கேணி, நகுலேஸ்வர ஆலயச் சுற்றுடல் பகுதிகளைச் சிரமதானம் மூலம் சுத்தம் செய்துள்ளனர்.

# மது அருந்திய வயோதிபர் சுருக்கிட்டு தற்கொலை!

(யாழ்ப்பாணம்)

மது அருநதும் பழக்கமுள்ள வயோதிபர் ஒருவர் சுருக்கிட்டு தற்கொலை செய்து கொண்டார்.

அரியாலையைச் சேர்ந்த வினாசித்தம்பி கின்னத்தம்பியின் (73-வயது) மரணவிசாரணையில் மேற்கண்ட தகவல் தெரியவந்தது.

யாழ். மரணவிசாரணை அதிகாரி க. கேசவன் மரணவிசாரணை நடத்தினர்.

இறந்தவர் ஒரு தொழிலாளி என்றும் மரக்காலையில் படுப்பது வழக்கமென்றும் இம்மாதம் 3ம் திகதி மது அருந்திய பின்வந்து பேசினரென்றும். பின் கற்களை விசினரென்றும் வீட்டில் நின்ற மரத்தை கோடாரியால் வெட்டினரென்றும் பின் இரவு மரக்காலையில் படுத்தாரென்றும் காலையில் பார்த்தபோது மரத்தில் சுருக்கிட்டிருந்தாரென்றும் சாட்சியமளித்த மகள் கமலாதேவி தெரிவித்தார்.

விசாரணையின் பின் தற்கொலை எனத்தீர்ப்பளிக்கப்பட்டது. [க]

# யாழ்ப்பாணத்தில் நீரிறைக்கும் இயந்திரங்கள் திருட்டு!

(யாழ்ப்பாணம்)

தண்ணீர்ப்பம்புகள் திருட்டு யாழ் நகரில் அதிகரித்துவருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பாஷையூர், கொய்யாத் தோட்டம, ஈச்சமோட்டை ஆகிய பகுதிகளில் இதுவரை 14 நீரிறைக்கும் இயந்திரங்கள் திருடப்பட்டுள்ளன

இரவு நேரங்களில் திட்டமிட்ட ஒரு கோஷ்டியினர் இத் திருட்டு வேலையில் ஈடுபட்டு வருவதாகக் கூறப்படுகிறது

பழையபூங்கா வீதியிலுள்ள நீதிபதியின் பங்களா மற்றும் ஹோட்டல், டாக்டர் வீடு உடபட பலவீடுகளில் இத்திருட்டு நடைபெற்றிருக்கிறதாம். அத்துடன் கூட்டுறவு மொத்த விற்பனவு ஸ்தாடனத்திலிருந்து உபகரணங்களும் டாக்டர் ஒருவரின் வீட்டில் தொலைக்காட்சிப் பெட்டிக்குப் பாவிக்கப்படும் 'அன்ரனு' போன்றவையும் களவாடப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## இல்ல விளையாட்டுப் போட்டி

(மண்டைதீவு)

மண்டைதீவு மகாவித்தியாலய வருடாந்த இல்லவிளையாட்டுப் போட்டி இத்த மாதம் 11-ம் திகதி நடைபெறவுள்ளது.

மேற்படி மகா வித்தியாலய அதிபர் திரு சு சண்முகநாதன் தலைமையில் நடைபெறும் இவ்விளையாட்டுப் போட்டிக்கு பிரதமவிருந்தினராக வடமாகாணக் கல்விப் பணிப்பாளர் திரு எம். சிமியாம்பிள்ளை கலந்து கொள்கின்றுர்

சிறப்பு விருந்தினர்களாக வட்டாரக்கல்வியதிகாரி திரு. பொன் கணேசன், வட்டாரக்கல்வியதிகாரிகள் திரு வி தங்கராசா (உடற்கல்வி) திரு வி. கணேசலிங்கம் ஆகியோரும்கலந்து கொள்ளுகின்றனர்

இவ்விளையாட்டுப் போட்டியை பாடசாலை அபிவிருத்திச் சங்கமும், விளையாட்டுக் குழுவும் இணைந்து நடத்துகின்றது.

## பாராட்டு விழா

(உடுவில்)

கல்வித்துறையில் கலாநிதி பட்டம் பெற்ற இணுவிலைச் சேர்ந்த எழுத்தாளரான திரு சபா ஜெயராசாவை கௌவித்துப்பாராட்டும் முகமாக இணுவிலூர் பாடசாலைகளும் பொது மன்றங்களும் இணைந்து இணுவில் அமெரிக்க தமிழ்க்கலவன் பாடசாலையில் விழா ஒன்றை நடாத்துகின்றனர்.

பாடசாலை அதிபர் திரு செ. சோதிப்பெருமாள் தலைமையில் இவ்விழா நடைபெறும்.

திரு சபா ஜெயராஜா யாழ் பல்கலைக்கழகத்தில் விரிவுரையாளராகப் பணியாற்றுகிறுர்.

கச்சேரியடி

# மின்கம்ப சடலம் மனநோயாளியினுடையது

[யாழ்ப்பாணம்]

தெல்லிப்பளை மனநோய் ஆஸ்பத்திரியிலிருந்து யாழ். ஆஸ்பத்திரிக்கு மாற்றப்பட்டு அங்கு சிகிச்சைபெற்றுவரும் போது தப்பிச்சென்ற மனநோயாளி ஒருவரே யாழ்ப்பாணம் கச்சேரிக்கு முன்னுல் உள்ள மின்கம்பத்தில் மரணதண்டனை பெற்றுர்.

புங்குடுதீவைச் சேர்ந்த நீலையனுர் ந ராசாவின் (56-வயது) மரணவிசாரணையில் மேற்கண்ட தகவல் தெரியவந்தது

யாழ் மரண விசாரணை அதிகாரி க கேசவன் மரணவிசாரணை நடத்தினுர்.

இறந்தவரின் நெற்றியில் சுடப்பட்டு கண்கள் இரண்டும் வெளியில் வந்திருந்ததாக விசாரணையில் தெரிவிக்கப்பட்டது

இறந்தவரின் மகன் ந. புவனேந்திரன் (20 வயது) சாட்சியமளிக்கையில்:

இறந்தவரான தகப்பன் கிளிநொச்சியில் மீன் வியாபாரம் செய்து வந்தாரென்றும் இரண்டு மாதத்திற்கு முன் வீட்டுக் கிணற்றுக்குள் தவறி விழுந்து காயம் ஏற்பட்டதால் இடதுகை வழங்காமல் போனதுடன் மனநோய் ஏற்பட்டதாகவும் தெரிவித்தார்

இதனைத்தொடர்ந்து ஆயுர்வேத வைத்தியரிடம் சிகிச்சை பெற்றபின் காளி கோவிலில் 10 நாட்கள் வைத்திருந்ததாகவும், பின்னர் தெல்லிப்பளை மனநோய் ஆஸ்பத்திரியில் அனுமதித்து இம்மாதம் 1-ம் திகதி அம்புலன்ஸ்மூலம் யாழ். ஆஸ்பத்திரிக்கு மாற்றப்பட்டதாகவும், 2-ம் திகதி அவர் 'எக்ஸ்ரே' எடுக்கச்சென்ற சமயம் தப்பிச்சென்று விட்டதாகவும் தெரிவித்தார். 5-ம் தேதி வரை அவரைப்பல இடங்களில் தேடியும் கண்டுபிடிக்காமல், கடைசியில் சடலத்தைக் கண்டதாகவும் அவர் மேலும் கூறினுர்

சடலத்திற்குஅருகில் இருந்த அறிவித்தல் பற்றியும் மரணவிசாரணையில் தெரிவிக்கப்பட்டது அந்த அறிவித்தலில் ஈழ விடுதலைப் போராட்டம் நடக்கும் இவ் வேளையில் இவர்களைப் போன்ற தேசத்துரோகிகளால் போராட்டம் மழுங்கடிக்கப்படுகிறது, 3-திகதி கைதுசெய்யப்பட்டு, விசாரணையின்போது 'தான் ஒரு தேசத்துரோகிஎன்று ஒப்புககொண்டபோதிலும்; ஆதாரபூர்வமாக நிரூபிக்கப்பட்டபின் 5-திகதி மரணதண்டனை வழங்கப்பட்டது' என்று கூறப்பட்டிருப்பதுடன் "தேசத்துரோகிகளுக்கு இதுவே தண்டனை" என்று எழுதி இயக்கத்தின் பெயர் ஆங்கிலத்தில் எழுதப்பட்டிருந்தது.

பிரேத பரிசோதனைக்கு உத்தரவிட்டு, விசாரணை ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

ஜேர்மனி, பிரான்ஸ், சுவிஸ், இத்தாலி, ஹொலண்ட்

முதலிய நாடுகளுக்கு

குறைவான கட்டணத்துடன் பாதுகாப்பான பிரயாண ஒழுங்குகள்.

கொழும்பிலிருந்து எமது பிரதிநிதி பிரயாணம் பூர்த்தியாகும்வரை உங்களுடன் வந்து எல்லா உதவிகளையும் செய்வார்.

பாஸ்போட், பொண்டிங், இந்தியன் விஸா முதலியனவும் செய்து கொடுக்கப்படும்.



PARIS TRAVELS
100,1/3, Keyzer Street,
Colombo-11

N. தவம்,

'சுமங்கலி',
நவீன சந்தை,
சாவகச்சேரி,

முகாமையாளர்,
குமரன் டூரிஸ்ட் இன்,
67, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 23753.

எட்வேட் தங்கவடிவேல் ராஜ்குமார்,
யோகநாயகி சினிமா,
வல்வெட்டித்துறை.

மேபெயர் மினி
(கன்ஹைதிட்டி)
பொல்லாத போக்கிரி
சிரஞ்சீவி (10-30 a. m.)

2 30 p m
WHERE EAGLES DARE
(War Flim)
தென்றலே
என்னைத் தொடு
மோகன்—ஜெயஸ்ரீ
5-30 p. m.

ஸ்ரான்லி மினி 'A'
10-30, 2 30
கமல் - ஊர்வசி
அந்தஒரு நிமிடம்
ஸ்ரான்லி மினி 'B'
10-30, 2-30
ஹீநாத், நளினி
கவுண்டமணி
கள் வடியும்
பூக்கள்

பவித்ரா மினி
கஸ்தூரியார் வீதி
(யாழ். இந்துக்கல்லூரியடி.)
10-30, 2-30, 4-30, 6-30
Blue Lagoon

தேவி மினி சினிமா
(வின்ஸர் அருகாமை)
6-7-85 தொடக்கம்
"Alice Good Body"
(color) Adults only

மொடேர்ண்
மினி சினிமா
(ஸ்ரீலங்காஅச்சக லேக்
ராஜா தியேட்டருக்கு
அருகாமை)
பெருப்பிக்கப்பட்ட
திரையில் 5'x5' மிகத்
தெளிவாகக் காண்பிக்கப்
படுகிறது.
காலை 10-30 காட்சிமட்டும்
படகோட்டி
இரவு காட்சி
INTIMATE MOMENTS

ராஜா தியேட்டர்
யாழ்ப்பாணம்
Daily 10-30, 2-30,
4-30 p. m
"SPLASH"
(color)
கடல்கன்னி பெண்ணாக
மாறும் அதிசயம்.
(கண்டிப்பாக வயது
வந்தவர்களுக்கு மட்டும்.

லதா மினி
(கோண்டாவில்)
10-30, 3 30, 6-30
விஜயகாந்தன்
ஜெயமாலினி அநுராதா
இது எங்கள் பூமி

வின்ஸர்
வெண்திரையில்
தினசரி 10-30, 2-30
GANDHI
காந்தி அடிகள்
மகாத்மாகாந்தி அடிகளின் உண்மையான சுதந்திரம் மக்களின் பிறப்புரிமை விரசுதந்திரம் வேண்டி நின்ற இந்திய மக்களை அறத்தில அன்பின் சாத்வீகப் போராட்டத்திலே வழிநடத்திவெற்றிகண்ட காந்தி மகானின் வாழ்க்கைவரலாற்றை சித்தரிக்கும் உன்னத திரைக்காவியத்தை பார்த்து மகிழுங்கள்
இன்னும் சிலதினங்கள் மட்டும்காண்பிக்கப்படும்.

குமரன்
மினி சினிமா
(67, ஸ்ரான்லி வீதி)
10-30, 2-30
மோகன்- ஜயஸ்ரீ நடித்த
ஸ்ரீதரின்
தென்றலே
என்னைத்தொடு

வெலிங்டன்
10-30 — 2-15 — 4-15
Midnight
Express
(திகிலூட்டும் சம்பவங்கள்
நிறைந்தது)

லிடோ சினிமா
10-30 — 2-30
புதுமைப்பெண்
10ந் திகதி முதல்
நீங்கள் கேட்டவை

சோபிகா மனி
(ஹோட்டல் சோபிகா
மேல்மாடி
பஸ்நிலையம் முன்பாக)
தினசரி 10-30, 2-30 6-00
கமல், ரஜனி, ஸ்ரீபிரியா
நடித்த
ஆடு புலி ஆட்டம்
பயங்கர சண்டைக்காட்சி
கள் நிறைந்த படம்

உஷா மினி
(கே கே. எஸ். வீதியில்
முட்டாசுக்கடை சந்திக்
கும் லை சி. சி. கு. கடை
சந்திக்கும் மத்தியில்)
தினசரி 10-30, 2-30
4-30, 6-00
Debra Blee in
The Beach Girls
(கண்டிப்பாக வயதுவந்த
வர்களுக்கு மட்டும்)

நியூ சாந்தி மினி
(யாழ். சாந்தி சினிமாவில்)
தினசரி 10-30, 2-30,
4-45 மட்டும்
"The First
Turn On"
(இன்று கடைசித் தினம்)

லிபேர்ட்டி மினி
(வெலிங்டன் சந்தி
அருகாமை)
தினசரி 10-30, 2-30,
ராஜேஸ் - நளினி
இளவரசி
ராஜாத்தி
ரோஜாக்கிளி
(புதிய படம்)
பி. 5-30க்கு
Clint Eastwood,
Lee Van Cliff
FOR A FEW DOLLAR
MORE
(Cow Boy Film)


## ஓய்வு பெற்றார்

[புலோலி]

பருத்தித்துறை மேலதிக பெரும்பகுதிப் பதிவுகாரராகக் கடமையாற்றிய திரு இ கதிர்காமலிங்கம் சேவையிலிருந்து இளைப்பாறியுள்ளார்.

பருத்தித்துறை மேலதிக பெரும்பகுதிப் பதிவுகாரராக திரு ஏ. நடராசா பொறுப்பேற்றுள்ளார்.

## மக்கள் ஏமாற்றம்

[சுண்டுக்குளி]

சுண்டுக்குளி தபாலகத்திற்கு அருகாமையில் அமைந்துள்ள பிரதான தபால்பெட்டி கதவு இல்லாத நிலையில் உள்ளதால் இதற்குள் கடிதம் போட வருபவர்கள் தினமும் பெருத்த ஏமாற்றத்துடன் தூரஇடங்களிலுள்ள தபால் பெட்டிகளை நாடி செல்கின்றனர்.

## நியமனம்

[யாழ்ப்பாணம்]

பிரபல சட்டத்தரணியும், நொத்தாரிசுமாகிய திரு. வீ. பி கார்த்திகேசு சமாதான நீதவானும், உத்தியோகப்பற்றற்ற நீதவானாகவும் நீதியமைச்சினால் நியமனம் செய்யப்பட்டுள்ளார். (ரா)

## 40 இந்தோனேசிய வீரர்கள் கொல்லப்பட்டனர்

(ஜகர்த்தா)

கிழக்கு தீமோரில் தனிநாடு கோரும் பிரிவினர் 40 இந்தோனேசிய படையினரைக் கொன்றுள்ளனர் இவர்கள் பதுங்கி நின்று தாக்கியே இந்தப்படை வீரர்களை கொன்றுள்ளனர்.

கிழக்கு தீமோரில் பல ஆண்டுகளுக்கு பின்னர் நடந்த மிகப்பெரிய தாக்குதல் இதுவாகும்.

## பெற்றோரின் பங்கு அவசியம்

(கரவெட்டி)

"பாடசாலையின் கட்டிட அமைப்புக்களின் நிலைமை பற்றியும் பிள்ளைகளின் கல்வி நிலைபற்றியும் அடிக்கடி தொடர்பு கொள்ள வேண்டியது, பெற்றோரின் முக்கிய கடமையாகும் அப்பொழுது தான் அப்பாடசாலை சகலவிதத்திலும் முன்னேற முடியும்" என்று வல்வெட்டித்துறை அ மி த க. பாடசாலை அதிபர் திரு. வே. குமாரசுவாமி இப்பாடசாலையின் அபிவிருத்திச் சபைக் கூட்டத்திற்கு தலைமை தாங்கி உரையாற்றுகையில் குறிப்பிட்டார்.

## சாவகச்சேரியில்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மக்கள் கருத்துரை வழங்கினார்கள்.

சுமார் ஐந்து மைல்களை உள்ளடக்கிய இந்த ஊர்வலத்தில் சென்றவர்களை வழி நெடுகிலும் உள்ள பொதுமக்கள் வரவேற்று தாகசாந்தி வழங்கி தமது ஆதரவினை வழங்கினார்கள். (து)


சாயி மினி சினிமா (அச்சுவேலி)
(குளிரூட்டப்பட்டது) 60" திரையில்
தினசரி 10-15, 3-15, 6-00
மோகன் - ஜெயஸ்ரீ
நடித்த
தென்றலே என்னைத் தொடு
SAIE TELE TAPE
AUDIO VIDEO RECORDING CENTER
Atchuvely
(4305)

விக்னு டியூசன் சென்றர்
52, ஸ்ரான்லி வீதி, யாழ்நகர்.
(கலை, வர்த்தகத்திற்கு தனித்துவம் வாய்ந்த நிறுவனம்)
A/L 86, 87 ஆண்டிற்கான
சனி, ஞாயிறு வகுப்புக்கள்
ஆரம்பம்: 13—07—85
காலை 11-00 மணி.
குறிப்பு- கலை, வர்த்தக வகுப்புக்கள் இந் நிறுவனத்தில் மட்டுமே சிறப்பாக நடைபெறுகின்றன.
4280


## ஓராண்டு நினைவஞ்சலி

த ச இராசநாயகம்

[உரிமையாளர்: றதிமில், கே. கே. எஸ் றோட், 3-வது மைல், கொக்குவில் ]



மலர்வு:
24- 07- 1924

உதிர்வு:
20- 06- 1984

திதி:
09- 07- 1985

ஓராண்டு சென்றாலும் ஒரு கணம்போல் எண்ணத் தோன்றும் உங்கள் நினைவலைகள் எக்கணமும் எம்மை விட்டகலாது.

உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்!
அன்பு மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், உற்றார், உறவினர், நண்பர்கள்:
கே. கே. எஸ். றோட்,
3-வது மைல், கொக்குவில். 4297


வெளிநாட்டு பிரயாணங்கள்
விமான டிக்கட்டுகள்
உங்களுக்குத் தேவையான சகல நாடுகளுக்கும் குறைந்த விலையில் பிரயாண வசதிகள் செய்து கொடுக்கப்படும்
BANGKOK / BERLIN.
LONDON. AMERICA, CANADA,
SWITZERLAND HOLLAND,
SINGAPORE, TRICHY and MADRAS.
இன்னும் பல நாடுகளுக்கும்.
மற்றும் பாஸ்போட், வீசா, பிரயாணகாசோலைகள் யாவும் பெற்றுக் கொடுக்கப்படும்.
கீதா ரவல் ஏஜென்சி
(உரிமையாளர்: கு. பொன்னுச்சாமி.)
தலைமைக் கந்தோர்: கிளை:
65, சத்தாம் வீதி, ஆலடி லேன்,
கொழும்பு-1. வல்வெட்டித்துறை
RESIDENCE
26, Vivekanada Hill St.,
Colombo- 13.
4290

தரமான
போட்டோஸ்ரற்
(PHOTO STAT)
தட்டச்சு எழுத்து (TYPING)
பிரதிகளுக்கு
கிளீன் கட்
(KLEEN KHUT)
239, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.
4312

ஈழநாடு
THE EELANADU
NATIONAL TAMIL DAILY

# 'உரிமைகளை மறுக்கும் தீர்வுகளை ஆதரிக்கமுடியாது'

## 'ரெஜ' விடுத்துள்ள அறிக்கை

(யாழ்ப்பாணம்)

''தமிழ் தேசிய இனத்தின் உரிமைகளை மறுக்கும்வகையில் சிறிலங்கா அரசு முன்வைக்கும் தீர்வுகளை ஆதரிக்கமுடியாது'' என்று 'தமிழீழ தேசிய இராணுவம்' (ரெஜ) இயக்கம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளது.

'எமது விடுதலையை நாமே நிலைநாட்டவேண்டும்' என்ற தலைப்பில் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில்,

''தமிழ்மக்களும் சிங்கள மக்களும் இருநாட்டின் மக்கள் என்பதும், தமிழ்பேசும் மக்கள் ஒரு இனம் என்பதும் ஏற்றுக் கொள்ளப்படவேண்டும். அதனடிப்படையில்தான் அரசு பேச்சுநடத்தவேண்டும். வெறுமனே உருப்படியில்லாத காலத்தை விணடிக்கும் பேச்சு வார்த்தைகளை நாம் ஏற்றுக்கொள்ளமுடியாது'' என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

எமது மக்களின் பிரச்சினைகளுக்கு நியாயமான தீர்வு காண ஆட்சியாளர் விரும்பினல், 'பயங்கரவாதம்? என்ற போர்வையில் கைதுசெய்த தமிழ்மக்களையும், இளைஞர்களையும் விடுதலைசெய்யவேண்டும் பயங்கரவாத சட்டமும், தமிழீழத்திலிருந்து இராணுவமும் வாபஸ்பெறப்படவேண்டும். இனப்பிரச்சினை காரணமாக அரசு நடைமுறைப் படுத்திவரும் சட்டங்களும், நடவடிக்கைகளும் நிறுத்தப் படவேண்டும்.

இவற்றை நடைமுறைப் படுத்தாது கடுமையான சட்டங்களுக்கும், போக்குகளுக்கு மத்தியில் பேச்சுவார்த்தைகளால் பயனில்லை'' என்று அவ்வறிக்கை மேலும் கூறுகின்றது. (மா)

# மக்கள் எழுச்சிகள் அவசியமானது

## துண்டுப் பிரசுரம் கூறுகிறது

[யாழ்ப்பாணம்]

எமது விடுதலையை யாரோ ஒருவர் தீர்மானிப்பதினை நாம் அனுமதிக்கமுடியாது. எமது போராட்ட உணர்வுகள் கூர்மை பெறட்டும். எமது மண்ணின் மீட்சியை நாமே தீர்மானிப்போம். 'இணைந்து போராடுவோம்' என்ற தலைப்பில் மாணவர் இளைஞர் பொதுமன்றத்தால் விடுக்கப்பட்டுள்ள துண்டுப்பிரசுரத்தில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த துண்டுப்பிரசுரத்தில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது:

அடிப்படை உரிமைகள் மறுக்கப்பட்டு வருகின்றன. எமது மக்களின் விடுதலைப் போராட்டத்தின் எழுச்சியினை நசுக்கும் வகையில் உருவாக்கப்பட்ட ''போர் நிறுத்தம்'' என்பதற்கு எம்மக்கள் எவ்வகையில் ஆதரவில்லை என்பதினை விளக்கும் வகையில் எதிர்ப்புக்கள் ஆங்காங்கே நடைபெற்று வருகின்றன. இவ்வகை எழுச்சிகள் போராட்ட வரலாற்றில் அத்தியாவசியமானதாக அமைந்துள்ளது.

''எழுச்சியுற்ற மக்கள் ஆயுதபாணிகளாக ஆயுதம் தரிக்க வேண்டும். இதன்மூலமே பறிக்கப்படுகின்ற எமது மண்ணை மீட்கமுடியும்'' என்றும் அத் துண்டுப்பிரசுரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ரா)

## மரண அறிவித்தல்

### ஜெகதீஸ்வரன் பேபி சுகன்யா

ஜெகதீஸ்வரன் பேபி சுகன்யா 6-7-85 ல் காலமானர். இவர் ஜெகதீஸ்வரன் (களஞ்சியப் பொறுப்பாளர் சவூதி அரேபியா) மகேஸ்வரி தம்பதிகளின் அருமைப் புதல்வியும் சுரேந்திரனின் அருமைச் சகோதரியும், சிவராஜா-நாகரத்தினம், வேலாயுதம்-ராசமணி ஆகியோரின் பேத்தியும், மாசிலாமணி - தவமலர், நடேசன் - யோகதேவி, சோமசுந்தரம், பஞ்சலிங்கம்-ஜெகதீஸ்வரி, குணசிங்கம் - சரோஜினிதேவி, சிவலிங்கம் - மங்களேஸ்வரி, ஸ்ரீநிவாசன் - தவனேஸ்வரி, சு. பாஸ்காரதன் - சாவித்திரிதேவி, ஆகியோரின் மருமகளும், பாலச்சந்திரன் - வசந்தவதி, வீரசிங்கம் - குணமணி, கந்தசாமி - மனோரஞ்சிதம், மனோராஜா - செல்வராணி, கனகசுந்தரம் - புஸ்பராணி, ஆகியோரின் பெருமகளும் ஆவார்.

ஈமக்கிரியைகள் பற்றிப் பின்னர் அறிவிக்கப்படும் உற்ருர், உறவினர், நண்பர்கள் அனைவரும் இவ்வறிவித்தலை ஏற்றுக்கொள்ளும்படி வேண்டப்படுகிருர்கள்.

43, சோதி வேம்படி ஒழுங்கை,
மானிப்பாய்.

4313

## ஒத்துழைக்காவிடில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

அந்த அதிகாரி அறையைவிட்டு வெளியில் சென்றுவிட்டார்.

நீங்கள் உங்களோடு ஒத்துழைக்குமாறு கூறுகிறீர்கள் நான் ஒத்துழைத்தேன். ஆனல் பாலுவுக்கு நேற்று பிணை வழங்க நீங்கள் மறுத்துவிட்டீர்கள். பாலுவின் குடும்பம் எனக்கு மிகநெருக்கமானது. நேற்று நீங்கள் அவரை தாக்கினீர்கள் பாலுவுக்கு நடந்தது பற்றிநான் மிகவும்மனம்பாதிக்கப்பட்டிருக்கிறேன் என்று திரு புண்ணியா டி சில்வாவிடம் கூறினேன்.

உங்கள் ஒத்துழைப்பைப் பொறுத்தே பாலு விடுதலை செய்யப்படுவார் என்று புண்ணியா டி சில்வா கூறியிருந்தார்.

18-11-82 அன்று இரண்டு வாலிபர்கள் அங்கே தலைகீழாக தொங்கவிடப்பட்டிருந்தது எனக்கு ஞாபகமிருக்கிறது.

மறுநாள் எனக்கு ஞாபகம் பாலுவுடன் இருந்தவர்கள் சங்கிலியால் பிணைக்கப்பட்டிருந்ததை அங்கு கண்டேன். புண்ணியா டி சில்வா வான் கடித உறை யொன்றை கொண்டு வந்து நேசனுக்கு கடிதம் ஒன்றை எழுதச் சொன்னர் அவர் சொன்னபடியாக எழுதினேன்.

''எனது வீடு சோதனையிடப்பட்டது. நேற்றிரவு எனது இரு குருவானவர்கள் கைது செய்யப்பட்டனர் நான் ராணுவ முகாமுக்குப் போகிறேன் எனக்கு கொஞ்சபணம் தேவை அதனுல் பணம் அனுப்புங்கள்'' என்று எழுதச்சொன்னர் அத்துடன் தயவு செய்து எனது பெயரைப் பாவிக்க வேண்டாம் இரகசிய வார்த்தையில் நாதன் எனக் குறிப்பிட்டு பின் குறிப்பொன்று எழுதச்சொன்ஞர். இதற்கான காரணத்தை அவர் சொல்லவில்லை.

மற்ருெரு பயங்கர இரவை சந்திக்க விரும்பாததால் அந்தக் கடிதத்தை எழுதி அவரிடம் கொடுத்தேன். அவர்களுக்கு தேவையானவற்றை எழுதிவாங்கிக் கொள்வதில் சி ஐ. டி. அதிகாரிகளுக்கு பழக்கமாக இருந்தது. எதையும் எழுதிக்கொடுக்க நான் விரும்பவில்லை. ஏனெனில் 'கழுத்தைக் கொடுத்தாலும் எழுத்தைக்கொடுக்காதே' என தமிழில் கூறுவார்கள்.

## ஸ்கந்தா இல்ல விளையாட்டுப் போட்டி

(யாழ்ப்பாணம்)

நாளை புதன்கிழமை பி. ப. 2-00 மணிக்கு ஆரம்பமாகும். சுன்ஞகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி இல்ல விளையாட்டுப் போட்டிக்கு யாழ் கல்வித்திணைக்கழ பிரதம கல்வி அதிகாரி திரு ஆர். சுந்தரலிங்கம் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார் திரு. ச. தனஞ்செயன், வ. க. அ விசேட விருந்தினராகச் கலந்து கொள்வார்.

### யாழ். இந்து இல்லப் போட்டி

யாழ் இந்துக் கல்லூரியின் வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டி இன்று நடைபெறுகின்றன.

மேற்படிப் போட்டிக்கு முன்ஞள் ஆசிரியர் திரு. எஸ் கணேசரட்ணம் பிரதம அதிதியாகக் கலந்து கொள்கின்ருர். [வி]

## வவனியாவில்

[1ம் பக்கத் தொடர்ச்சி]

ருந்ததாகவும் நமது வவனியா நிருபர் தெரிவிக்கிருர்

வவனியாவுக்கும் மற்றும் இடங்களுக்குமிடையேயான இ போ. ச. பஸ் மினிபஸ் சேவைகள் நடைபெருதிருந்த போதிலும் வவனியாவிலிருந்து மன்ஞர் நோக்கிச் சென்ற இரு இ போ. ச. பஸ்கள் இளைஞர் கோஷ்டி ஒன்றினல் திருப்பிவிடப் பட்டதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

பாடசாலைகள் வெறிச்சோடிக் காணப்பட்டதாகவும் வீதிகளில் பொதுமக்கள் நடமாட்டம் வெகு குறைவாக இருந்ததாகவும் அவர் சொன்ஞர். [மா]

# பூட்டான் பேச்சுக்கள்

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

தலைவர்கள் கலந்துகொள்ளக் கூடும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

### பி பி. ஸி. விமர்சனம்

பூட்டான் பேச்சுகள்தொடர்பாக பி பி ஸி யின் புதுடில்லி நிருபர் மாக்ரெலி லண்டனுக்கு அனுப்பியுள்ள செய்திக் குறிப்பின் ஒருபகுதி வருமாறு:

அண்மைக்காலம்வரை இலங்கை அரசு தமிழ்த்தீவிரவாதிகளுடன் நேரடிப் பேச்சுவார்த்தைகள் நடத்த மறுப்பு தெரிவித்து வந்தார்கள் தனிநாடு தவிர வேறு எந்த முடிவையும் ஏற்றுக்கொள்ளப் போவதில்லை என்று தமிழீழ விடுதலைப் போராளிகள் குழுக்களின் தலைவர்கள் கூறிவந்தனர்

இந்தியாவின் சமாதான முயற்சிகளுக்கு மதிப்பளித்து இரு தரப்பினரும் தற்பொழுது திம்பு மகாநாட்டில் கலந்து கொண்டிருக்கிருர்கள்.

இந்த இருதரப்பிலும் முக்கியமானவர்கள் எவரும்கலந்து கொள்ளவில்லை அதாவது இலங்கை அரசின் சார்பில் அரசியல் தலைவர்களோ அமைச்சர்களோ இல்லை. அது போலவே தமிழீழ விடுதலைப் போராளிகள் சார்பில் அதன் பிரதிநிதிகளே கலந்துகொண்டிருக்கிருர்கள்.

கடந்த காலங்களில் தமிழ்த் தீவிரவாதிகளுடன் பேச்சு வார்த்தை நடத்த மறுத்து வந்த இலங்கை அரசு அண்மையில் அனுராதபுரத்தில் 146 சிங்களப் பொதுமக்கள் சுட்டுக்கொல்லப்பட்ட பின்பே இந்தப் பேச்சுவார்த்தை மூலம் தீர்வுகாணும் சிந்தனை இலங்கை அரசுக்கு ஏற்பட்டது.

அனுராதபுர சம்பவத்தால் இலங்கை அரசு கடுமையான கண்டனத்திற்கும் விமர்சனத்திற்கும் உள்ளானது இதுவரை காலமும் வளைந்து கொடுக்காத பௌத்த பிக்குமாரே தமிழ் போராளிகளோடு சமாதானப் பேச்சுவார்த்தை நடத்தி இனப்பிரச்னைக்கு ஏதாவது ஒரு தீர்வு காணவேண்டும் என்று ஆலோசனைகளை கூற ஆரம்பித்தார்கள்

இலங்கை ஜனதிபதி ஜே. ஆர் ஜெயவர்த்தன புதுடில்லியில் இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தியைச் சந்தித்து அவசர அவசரமாக பேச்சுவார்த்தை நடத்தினர்.

எப்படியும் இலங்கைச் சண்டைகள் நிறுத்தப்பட வேண்டும் என்று வலியுறுத்தப் பட்டதன் பயனக தற்பொழுது யுத்த நிறுத்தம் அமுலில் உள்ளது.

தமிழ் போராளிகள் இந்தியாவுக்கு பெருமதிப்பளித்து போர் நிறுத்தத்திற்கு ஒப்புக் கொண்டார்கள் அதன்பிறகு இருதரப்பினரும் நேரடியாக பேச்சுக்கள் நடத்தவே இந்த திம்பு பேச்சுவார்த்தை ஒழுங்கு செய்யப்பட்டது.

கடந்த வாரம் இந்தச் சந்திப்புகளில் தமிழ் தீவிரவாதிகள் கலந்து கொள்வார்களா? என்ற ஐயப்பாடு எழுந்தது. ஏனெனில் இலங்கை அரசு போர்நிறுத்த உடன்பாட்டை மீறி செயல்படுகின்றது என்று குற்றஞ் சாட்டப்பட்டது. என்ருலும் மகாநாடு நேற்று ஆரம்பித்து விட்டது. முடிவு என்ன என்பதை இருதரப்பும் மட்டுமல்ல உலகே பார்த்துக் கொண்டிருக்கிறது.

கடந்த பத்து ஆண்டுகளாக ஈழவிடுதலைக்காக தமிழ்ப்போராளிகள் போராடிவருகிருர்கள் ஆரம்பத்தில் இந்த சமாதானப் பேச்சுவார்த்தைகளில் கலந்து கொள்ள தமிழ்தீவிரவாதிகள் விரும்பவில்லை.

இந்தியாவின் வற்புறுத்தலுக்கு பணிந்தே அவர்கள் இந்த பேச்சு வார்த்தைகளில் கலந்து கொண்டிருக்கிருர்கள்.

இலங்கை அரசின் சார்பில் அரசியல் சம்பந்தப்பட்டவர்கள் இப்பேச்சு வார்த்தைகளில் கலந்து கொள்ளாததால் அரசியல் ரீதியான முடிவுகள் இப்பேச்சுவார்த்தையின் போது எடுக்கப்படும் சாத்தியக் கூறு இப்பொழுது இல்லை.

இதுவரைகாலமும் ஜனதிபதி ஜே. ஆர். ஜெவர்த்தன அவர்கள் முன்வைத்ததீர்மானங்களை இலங்கைத் தமிழ் தலைவர்கள் எவரும் ஏற்றுக்கொள்ளவில்லை எனவே இப்பொழுது அதிகப்படியான சலுகைகள் ஏதாவது வழங்கப்படுமா என்று சிந்திக்க வேண்டியுள்ளது.

## நேற்றும்...

[1ம் பக்கத் தொடர்ச்சி]

கொண்டிருந்த வீதிகளில் அவ்வப்பகுதி மக்களும் சேர்ந்து கொண்டனர்.

கடும் வெயிலையும் பொருட்படுத்தாது மெதுவாக ஊர்வலம் ஊர்ந்து சென்றது. பல பகுதிகளிலிருந்து வேம்படி சந்தியில் ஒன்று சேர்ந்து பலாலி வீதி வழியாக யாழ். பல்கலைக் கழக வீதி வரை சென்றடைந்தது

காங்கேசன்துறையிலிருந்து காலை புறப்பட்ட ஊர்வலம் காங்கேசன்துறை யாழ். வீதி வழியாகத் தட்டாதெருச் சந்தியை அடைந்து யாழ் பல்கலைக்கழக வீதியை சென்றடைந்தது

தெல்லிப்பழையிலிருந்து புறப்பட்ட மற்ருெரு ஊர்வலம் மல்லாகம் சந்தியால் திரும்பி மானிப்பாய் இந்துக்கல்லூரியை அடைந்தது.

மற்றும் வடமராட்சிப் பகுதியிலும் ஆர்பாட்ட ஊர்வலங்கள் நடைபெற்றன.

'மக்களே புறப்படுங்கள் ஈழத்தை அமைப்போம்' என்ற பெரிய சுலோக அட்டையை சிறுவர்கள் ஏந்திச்செல்ல, அணியணியாக சிறுமிகள், அதனைத்தொடர்ந்துபெண்கள், பின்னல் ஆண்கள் ஆயிரக்கணக்கில் சென்றனர்

''பூஸாவில் இளைஞர்கள் பூட்டானில் பேச்சா'' விளித்தோம் கிளர்ந்தோம் விடுதலை நெருங்கும் போது பேச்சுவார்த்தையா? இராணுவத்தை வாபஸ்பெறுமவரை, சிங்களக் குடியேற்றதைநிறுத்தும்வரை, போராளிகள் விடுதலைசெய்யப் படும்வரை போர் நிறுத்தம் வேண்டாம்! மலையகமக்களுக்கு குடியுரிமை வழங்க வேண்டும் என்ற சுலோக அட்டைகள் ஊர்வலத்தில் காணப்பட்டன,

பஸ்நிலையத்திலிருந்து பலாலி சந்திவரை வீதி ஓரம் மக்கள் வெள்ளமாக காட்சியளித்தது வீதியோரங்களில் பெருந்திரளான மக்கள் நின்று ஊர்வலத்தில் சென்றவர்களுக்கு ஆதரவு தெரிவித்துக் கொண்டிருந்தார்கள்.

(க-மா)

## தேர்தல் வழக்கு

[1ம் பக்கத் தொடர்ச்சி]

சேபித்து தாக்கல்செய்யப்பட்ட மனு, தேர்தல் நீதிபதியினுல் தள்ளுபடி செய்யப்பட்டதற்கு எதிராக திரு, விஜய குமாரணதுங்கா, திரு. டபிள்யு. வி. எல். ஜெயசிங்க ஆகியோர் செய்த மேன்முறையீட்டை விசாரணைசெய்த உயர்நீதிமன்ற நீதியரசர்கள் பெரும்பான்மைத் தீர்ப்பினுல் அதனைத் தள்ளுபடிசெய்துள்ளார்கள்.

பிரதம நீதியரசர் எஸ். சர்வானந்தா மற்றும் நீதியரசர் பேர்ஹற்கொலின்தோமே நீதியரசர் டி. அத்துக்கொறல, நீதியரசர் எல் டி. எஸ் அல்விஸ் ஆகியோர் ஒருமித்து இந்த மேன்முறையீட்டைத் தள்ளுபடி செய்தார்கள்.

அதேசமயம் நீதியரசர் ஆர். எஸ் வனசுந்தர இதற்கு மாறுபட்ட தீர்ப்பை தெரிவித்திருக்கிருர். (து)

இப்பத்திரிகை ''ஈழநாடு'' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் கிவன்கோவில் மேற்கு வீதி, 63ம் இலக்க அச்சகத்தில் 1985-ம் ஆண்டு ஜூலை மாதம் 9-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number B 100236/81 Eelanadu P. Box 49, Telegram Eelanadu, Telephone; 22389 ,24126,